ஞானசம்பந்தம்

மலர் 12]   விஜய ௵ ஆவணி ௴ 10—9—53   [இதழ் 10

சீகாழி:

பிரமதீர்த்தக்கரையில்:

சிவபாதஇருதயர்

சிறுகோல் கொண்டு

ஓச்சுதல்.

ஆசிரியர் :   நாகலிங்கத் தம்பிரான்.

உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.

தருமபுர அதீன

தருமபுர ஆதீன வெளியீடு.

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்ரோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக் கின்றன.

டிம்மி 1x8 சைஸ். பக்கங்கள் 768.

விலை விபரம்:

ராப்பர் பைண்டு:	...	ரூ. 3—8—0
ரிஜிஸ்டர் தபாற்செலவுவகையரு.		ரூ. 1—5—0
காலிகோ பைண்டு:	...	ரூ. 5—0—0
ரிஜிஸ்டர் தபாற்செலவு வகையரு		ரூ. 1—8—0

கிடைக்குமிடம்:—

ஷராப்,
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயூரம் P.O.
தஞ்சாவூர் ஜில்லா.

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 12] விஜயஸ்ரீ ஆவணிமீ 10—9—53. [இதழ் 10

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

எளிமையில் பெருமை உண்டு

எளிமை எல்லோர்க்கும் எப்பொழுதும், காட்சிக்கும் உதவிக்கும் எளியனுயிருக்கும் தன்மை. எளிமைக்கு எதிரானது அருமை. அருமைக்கே மற்ருெரு பொருள் இன்மை என்பது. 'அருங்கேடன் என்பது அறிக' என்ற குறட் பகுதிக்குப் பரிமேலழகர் 'கேடில்லாதவன்' என உரைகண்டார். இதனுல் தெரிவது என்ன! மிக அருமையான பொருள் இல்லாத பொருள்போல் பாவிக்கப்படும் என்பதுதானே. நீங்கள் கேட்கலாம். இரும்பு முதலான உலோகங்களைக் காட்டிலும் வெள்ளி அருமையாகக் கிடைக்கக் கூடியது. வெள்ளியைக் காட்டிலும் பொன். பொன்னைக் காட்டிலும் மணி. மணியைக்காட்டிலும் அபிரேகம். அபிரேகத்தைக் காட்டிலும் யுரேனியம். இதிலிருந்து, எவ்வளவுக்கெவ்வளவு

பொருள்கள் மிக மிகச் சொற்பமாகக் கிடைக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அருமை மிகுகின்றது என்பதுதானே அறியப்படுகிறது. ஆகவே மனிதனும் எவ்வளவுக்கெவ்வளவு அருமையாகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுக்குப் பெருமை ஏறுகிறது.

அநுபவ ஞானிகள், மனிதன் பழகும் வகையில் அருமை கூடாது; எளிமைதான் எல்லாவகையான ஏற்றத்தையும் தரும் என்கின்றார்கள். வள்ளுவரும் 'காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூரும் மன்னன் நிலம்' என்கிறார். நடந்துகாட்டி நம்மையெல்லாம் ஆட்கொள்ளும் நடராசப் பெருமானும் 'அடியார்க்கு எளியன்' என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளுகின்றார் பாருங்கள். எளிமை இன்பம், வஞ்சகம் இல்லா வெளிப்படையான வாழ்வு. அதனால் மனிதன் தரம் உயர்கிறது. அருமையும் பெருமையும் நம்மிடை இயற்கையே அமைந்தன அல்ல. நாம் பழகும் எளிமையைக்கண்டு பிறர் தரும் பரிசுகள் அவை.

எளிமையைக் கொள்வது எப்படி?

எளிமை என்பது தன்னுடைய தகுதிக்கும் பரம்பரை வழக்கத்திற்கும் மாறாக மிகக் கீழே இறங்கி வந்துவிடுதல் அன்று. இருந்த நிலையில் இருந்தே கீழே இருப்பவனைக் கைகொடுத்து உயரத் தூக்குதல். எளிமை என்று இறங்கியே வந்துவிட்டால், இவனும் பள்ளத்தில் விழுந்தவனாக, பிறரைத் தூக்கும் வகையின்றித் தவிக்க நேரும். அதனாலேயே நமது சிவாநுபவச் செல்வர்கள் - குருமகாசந்நிதானங்கள், ஆசாரம், சம்பிரதாயம், சாஸ்திரம் என்ற வரம்பிலிருந்தே எளிமையாக தமது ஞானக்கருத்தை நன்கு நீட்டி, பள்ளத்தில் விழுந்தவர்களை மெல்ல மெல்லத் தூக்குகிறார்கள். இதுதான் எளிமை. இதில்தான் பெருமையிருக்கிறது.

501

காவிய விளக்கம்

[வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை.]

(தொடர்ச்சி)

இறைவனுடைய உருவத்தைப்பற்றி ஆராயப்புகுந்த அம்மையார் இறைவனைப்பார்த்து 'உன்னுடைய உருவம் எது? என்று கேட்பாருக்கு யான் நின் உருவம் எவ்வுருவம் என்று சொல்லுவேன்' என்னும் வினாவைஎழுப்பிக்கொண்டு:-

"அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது?"

என்று பாடிமுடித்து அதற்குத் தாமே விடை கூறுவார்போல் 'இறைவனே! நீ அன்பர்கள்பொருட்டு எடுத்த வடிவங்கள் பலவற்றுள் உனக்கு விருப்பமான வடிவம் எது என்பதை யார் அறிவார், அர்ச்சுனன் பொருட்டு வில் வேடனாக உருவெடுத்து வந்தீரே; அது உமக்கு ஏற்ற வடிவோ வேறு ஏதோ என்கின்றார். இவ்விதமாக அம்மையார் இறைவன் உருவைப்பற்றிப் பேசிவிட்டு இறைவனுக்குரிய உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூன்று திருமேனிகளுள் அருவுருவத் திருமேனியே தன்னுள்ளத்தில் குடிகொண்டிருப்பதாகக் கூறுகிறார். அருவுருவம் என்பது கண்ணுக்குக் காட்சியளிப்பதாயும், கைக்கு அகப்படாததாயும் உள்ளது. அத்திருமேனி யாதெனில் அதுதான் ஜோதி சொரூபம். அதாவது ஒளிவடிவு. அதில் உருவத்தன்மையும், அருவத்தன்மையும் அமைந்துள்ளது. அதுவே அறியாமையாகிய இருளைப்போக்கி அறிவாகிய ஒளியை நல்குவது. அந்த ஒளிவடிவே, தான் தூய்மையுடையதாய்த் தன்னைச்சார்ந்த தூய்மையற்ற பொருளையுந் தகித்துத் தூய்மைப்படுத்துவது.

இதனால்தான், எம்மதத்தவரும் ஆண்டவனை ஒளிவடிவினனாகக் கொள்வாராயினர். 'சோதியே சுடரே' என்று மாணிக்கவாசகரும், 'பொங்கு அழல் உருவன்' என்று

திருஞானசம்பந்தரும், 'தீவண்ணர்' என்று திருநாவுக்கரசரும், 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை' என்று இராமலிங்க அடிகளும்போன்ற பெரியோர்கள் அவ்வுருவத்தை இறைவனுக்குரியதாக விதந்து கூறுவாராயினர். நமது அம்மையாரும்,

'காண்பார்க்குச்
சோதியாய் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்'

என்றும்,

"இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமாறு
இதுவன்றே என்றனக்கோர் சேமம்—இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
இன்னுஞ் சுழல்கின்ற திங்கு"

என்றும் விளக்கியுள்ளார்.

அம்மையார் அருளிய பாடல்கள் நம் உள்ளத்தை உருக்கி அவர் அடைந்த பயனை நமக்கு அளிக்கவல்லன. அவர் நெஞ்சுக்குக் கூறுவனவாயுள்ள பாடல்கள் நம் நெஞ்சை உருக்குகின்றன. அவற்றிற் சில பாடல்களைக் காண்போம்:-

"ஏ! மனமே நீ நினைத்ததையெல்லாம் முடிக்க ஒரு வழி சொல்லுகிறேன் கேள்" என்று நெஞ்சுக்கு உபதேசிக்கிறார். நாமும் நினைத்ததை நினைத்தபடி முடிக்க விரும்புகிறோமல்லவா? அந்த உபதேசம் என்னவென்று கேட்போம்.

"கருத்தினால் நீகருதிற் றெல்லாம் உடனே
திருத்தலாம் சிக்கெனநான் சொன்னேன்—பருத்தரங்க
வெள்ளநீ ரேற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது"

இது எவ்வளவு சிறந்த உபதேசம்; இதற்குப் பொருட்செலவில்லை; பிறர் உதவியும் வேண்டுவதில்லை. இறைவன் திருவடிகளை எப்போதும் சிந்திப்பதொன்றே போதும். ஆனால் இதற்கு ஒன்றுபட்ட மனம்தான் வேண்டும். இதற்கே ஞானிகள் தவத்தை மேற்கொள்கின்றனர். இந்நிலையை நாம் அடைவதற்கு இந்நெறியில் நின்ற அம்மையாரவர்களுடைய அனுபவ

உணர்வால் வெளிவந்த அருட்கவிகள் நமக்கு அவ்வுணர்வை ஊட்டுமென்பதில் ஐயமில்லை. அதனை அனுபவித்து ஓதுவது நமது கடமை.

அம்மையார் ஆண்டவனைப்பார்த்து 'நீர் திருக்கூத்தாடும் போது சற்று நிதானமாக ஆடவேண்டும்; இல்லாவிடில் நடன அரங்கு தாங்காது என்று நயம்படப்பேசுகிறார். ஏன்? ஆண்டவன் அதிரும்படி கூத்தாடும்போது கால் பாதாளலோகம் போய்விடுமாம்; தலை வான் முகட்டைப் பிளந்து சென்று விடுமாம்; கைகள் எட்டுத் திசைகளையும் பிளந்து செல்லுமாம் ஆதலால், பைய ஆடவேண்டுமென்கிறார் அப்பாடல் :—

" அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேருங்—கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்ற தரங்கு "

என்பது. அப்படிப்பட்ட இறைவனை அம்மையார் அன்பென்னும் போர்வையால் மறைத்துப் பிடித்து நெஞ்சுக்குள் வைத்துக் கொள்ளலாம் என்று நமக்கோர் வழிகாட்டியுள்ளார்.

" ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து "

என்பதாகும். இறைவனைப் 'பக்தி வலையிற் படுவோன்' என்றார் மாணிக்கவாசகரும், அம்மையார் இறைவனடியைச் சார்ந்து எய்திய நன்மைகள் இவையென்று கூறுவதைக் கேட்டு நாமும் அதற்கு முயலவேண்டாமா? அஃதென்ன? வெனில்,

" காலனையும் வென்றோம் கடுநரகங் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம்—கோல
அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து "

என்பது. அற்புதத்திருவந்தாதியின் கற்பனைநயங்களிற் சில காண்போம். சிவபெருமானுடைய சிவந்தமேனி, அம்மேனியி

லணிந்துள்ள வெள்ளிப் திருநீறு, சிவந்த சடை, கரியகண்டம் இவற்றிற்கு முறையே காலை, பகல், மாலை, இரவு இவற்றை உவமையாகக் கூறும் நயம் பாராட்டற்குரியது. அச்செய்யுள்:-

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு"

அம்மையார் நகைச் சுவைபடப் பேசுதலிலும் வல்லவர். அதற்கோர் உதாரணங் கூறுவோம். சிவபெருமானே! நீர் வீடுதோறும் பிச்சையெடுக்கப் போகும்போது பாம்பை ஆபரணமாக அணிந்து செல்லவேண்டாம். அதைக்கண்டு பிச்சையிடும் பெண்கள் அஞ்சுவார்கள் என்னுங் கருத்தமைந்த,

"நீயுலக மெல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய் - தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விடஅரவம் மேலாட மிக்கு"

என்னும் பாடலைப் படித்து இன்புறுவோமாக.

இதுவரையுங் கூறியதிலிருந்து கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில், வணிகர் குலத்தில் தோன்றிய காரைக்காலம்மையார் இளமையிலேயே கல்வியுந் தெய்வ பக்தியும் உடையராய்ப் பின்பு இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு அதை ஒழுங்குற நடத்திப் பின்பு இறையருளை நாடி அற்புதத் திருவந்தாதி பாடி, அதன் வாயிலாக இறைவனியல்பு, உயிர்களினியல்பு, உயிர்கள் பேரின்பமடைய இறைவனையடையும்நெறி முதலியவற்றை உபதேசித்த முறை, அம்மையார் இறைவனிடம் வைத்துள்ள உறுதியான அன்பு, அவர்பெற்ற பேறு முதலியன ஒருவாறு விளங்கும். இவ்வம்மையாரது வரலாறும், அவர் இயற்றிய அற்புதத் திருவந்தாதியும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் உயர்ஞானத்துக்கு ஓர்எடுத்துக்காட்டாகும்.

தமிழர் வீரம்

[தென்னுப்பிரிகா – டர்பன், திரு. ச. மு. பிள்ளை.]

தொல்காப்பியப் பொருளதிகாரம் ஒன்பது இயலாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வொன்பதில் புறத்திணை இயல் என்பதொன்று. அத்திணையின் உட்பிரிவாகக் காணக்கிடைப்பன ஏழு திணைகளாகும். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன. இத்திணைகளில் எல்லாம் பெரும்பான்மையாக நாம் அறிவது பண்டைத் தமிழ்நாட்டினரின் போர்நெறியும், அன்னவர்களின் வீரச் செயல்களுமேயாகும். பெரும்பான்மையெனவே சிறுபான்மை அரசியல்முறை, கொடை, புகழ், நிலையாமை முதலியவற்றைப் பற்றியும் அறியலாம். திணையின் உட்பொருள்களையெல்லாம் விரிக்கிற் பெருகுமாதலால், சுருங்கச் சில காண்போமாக.

வீரர்கள் கொற்றவையை வழிபட்டு வந்தனர். அவர் காலில் ஒலிப்பது வீரக்கழல் எனப்படும். முற்காலத்தில் போரில் இறந்துபட்ட வீரர்களின் நினைவாக வீரக்கல் நடுவது பழக்கம். அது,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்"

என்ற தொல்காப்பிய அடிகளால் புலனாகின்றது. அக் கல்லின்மீது வீரனது பெயரும் பெருமையும் எழுதுதல்,

"அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்" (புறம்)

"பெயரும் பீடு மெழுதி யதர்தோறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகம்)

என்பதனாலும்,

"அவன் பெயர் கல்மிசைப் பொறித்துக்
கவின்பெறக் கல் நாட்டின்று"

என்ற புறப்பொருள் வெண்பா கொளுப்பகுதியானும் புலனு கும். இன்னும்,

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்நின்று கல் நின்றவர்"

என்னும் திருக்குறட் பகுதியும் கல்நடும் பழக்கத்தை வலி யுறுத்துகின்றது. மேலும்,

"கைவேல் களிற்றேடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

"விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை யெடுத்து"

"உறினுயி ரஞ்சா மறவர் இறைவன்
செறினுஞ்சீர் குன்றல் இலர்"

என்னும் குறட்பகுதிகளையும் உரையையும் நோக்குங்கால் உண்மை வீரம் உதிக்கவில்லையா?

பொருளும் இன்பமும் அறத்தின் பின்னுவதுபோல, சேரபாண்டியருடைய இரண்டு குடையும் பின்னுகத் திங்கள் போன்ற குடையையுடையவன் என்றும், புகழைவிரும்பிப் போரினைச்செய்யும் படைவீட்டின்கண்ணே இருத்தலல்லது, தன்நகரின்கண் இருத்தலை உடன்படானென்றும், பகைவரின் மதிலைக்குத்தும் யானைகள் அடங்காவென்றும், போரெனக் கேட்ட வளவிலே விருப்பம்மிகுந்து வீரக்கழலணியும் மறவர், செல்லவேண்டியநாடு தூரத்ததாயினும் அண்மையெனக் கருதுவாரெனவும், சோழன் கடல்வழியாகத் தம் நாட்டின் கண் புகுதலும் உண்டென்று சுழன்று துயிலாத கண்ணை யுடையவர்களாக வடநாட்டு அரசர்கள் இருந்தனர் எனவும், நாம் கற்கும்பொழுது அம்மன்னனின் வீரமும், வீரரின் வீரமும் இனைத்தெனக் கூறலும் வேண்டுமோ?

"சிற்றி னற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னேஎன வினவுதி; என்மகன்

507

யாண்டுள ணயினும் அறியே னேரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிரோ இதுவே!
தோன்றுவன் மாதோ போர்களத்தானே" (புறம் 86)

என ஒரு பெண்மணி கூறுங் கூற்றிலிருந்து வீரத்தாயின் வீரமொழி வீறிட்டெழுவதைக் காண்மின்!

"களம்புகல் ஓம்புமின் தெவ்வீர் போரெதிர்ந்
தெம்முளும் உளனொரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே" (புறம்)

என 'ஒருநாள் எட்டுத்தேரைச் செய்யும் தச்சன் ஒருமாதங் கூடிக் கருதிச்செய்யப்பட்டதோர் தேர்க்காலை யொப்பனென' விரைவும் திண்மையும்பற்றி உவமைகூறியது வீரத்தைக் காட்டுவதொன்றும்.

ஓரரசன் தமிழ்நாட்டு மூதாட்டியைப் பார்த்து 'என்னுடன் பொருதற்குரியவர் நும்முடைய பெரியநாட்டிலிருக்கின்றனரோ?' என வினவிய வேந்தன் நாண, 'அரசே! நீ போர்செய்யக் கருதுவையாயின், அடிக்குங் கோலுக்கஞ்சாது எதிர்மண்டும் பாம்புபோன்ற வீரருமுளர்; அதுவேயன்றி, மரத்தின்கண் தூங்கும் முழவில் காற்றெறிதலினால் எழும் ஓசையைக் கேட்டுப் போர்ப்பறையென்று மகிழும் என்னுடைத் தலைவனும் உளன்' எனக் கூறியபெருமிதம், ஒரு பெண்ணின் வீரமொழியென்பதை எவர்தான் மறுக்கமுடியும்?

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம்)

எனப் பொன்முடியார் கூறிய பொன்மொழி, அக்கால மக்களின் கடமையைக் காட்டுவதொன்றாகும். இக்காலக் குழந்தைப்பருவமுதற்கொண்டே இளைஞர்களைப் பூச்சாண்டிக்கும்

அஞ்சுகண்ணனுக்கும் ஆளாக்கி அச்சத்தையூட்டி, அறிவை அழித்து, வலிமைகுன்றச் செய்கின்றனர். இனிமேலாவது குழந்தைகளைப் பயமென்னும் பாவிக்கு ஆளாக்காது பாது காக்க முற்படுவாராக.

சிறுபாணாற்றுப்படையில்,

"மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்" (121-122)

என்றவாறு நல்லியக்கோடன் பகைவரது மார்பிலும் முகத்திலும் தாக்கிய வீரவாளையும், புலிபோன்ற வலிமையையும் உடையவன்; அடிகளில் வீரக்கழல் கிடந்தசையும் என்று பலவாறுகக் கூறியிருப்பது படித்து இன்புறுதற்பாற்றே. பெரும்பாணாற்றுப்படையில் அரசரின் வீரமும், வணிகனின் வீரமும், பெண்ணின் பெருமிதமும் பிறப்பதைக் காண்மின்.

"பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பிற் பூண்டுபடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட்
கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
உடம்பிடித் தடக்கை ஓடா வம்பலர்" (70-76)

"யானை தாக்கினும் அரவுமேற் செலினும்
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறு மறம்பூண் வாழ்க்கை" (134-136)

என மாணிக்கம், முத்து, சந்தனம் முதலியன கொண்டுபோய் விற்றுத் திரியும் வாணிகரின் வீரவாழ்க்கையையும்; குறிஞ்சி நிலப் பெண்கள் சூல்கொண்டகாலத்தும், யானை எதிர்ப்படினும், பாம்பு தம்மேற்செல்லினும் அஞ்சமாட்டார்களெனக் கூறும் வீரவாழ்க்கையும் கூறப்படுதல் காண்க.

இவ்வாறே தமிழ்மன்னனுகிய இளந்திரையனின் வீர வாழ்க்கையை (448-460) புறநானூற்று அடிகளால் நன்கு

அறியலாகும். அவன், யானையைக்கண்ட சிங்கக்குட்டி அதன் மத்தகத்தை விரும்பினாற்போல, பகைவரது மதில்களை அழித்து அரசருடைய முடிக்கலம் முதலியவற்றை வாங்கிக் கொண்டு வீரமுடி புனையும் வெற்றியையுடையவன்; வீரர்க்கு வீரத்தைக் கொடுக்கின்றவன்; கொடியோர்க்குக் கொடியவன் என்றவாறு வருவதைப் படித்து இன்புறுவீராக. இன்னும் முல்லைப்பாட்டில் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார், பாசறையைப்பற்றி விரிவாகக் கூறியிருப்பது புலவர் வீரத்தையும், அரசர் வீரத்தையும் அறிவிப்பதொன்றாகும். ஆசிரியர் நக்கீரனார் நெடுநல்வாடையில் பாசறையின் பண்பைத் தெளிவாகக் காட்டியுள்ளார். அவற்றையெல்லாம் கூறப்புகின் ஒரு தனிப் புத்தகமாகவே விரியும். ஆதலால் அன்பர்கள் படித்து அறிவாராக.

இறுதியாக வீரத்தையூட்டும் உணவைப்பற்றிச் சிறிது ஆராய்வோமாக. நம் மக்கள் மாமிசம் உண்டால் வீரம் உண்டாகும் என்ற ஒரு குருட்டு எண்ணத்தால் மாமிச உணவைக் கையாண்டு நம்பிவருகின்றனர். மாமிச உணவில் மிதந்த ஆங்கிலேயர்களே தங்கள் ஆராய்ச்சியினால் மாமிச உணவினும் தாவர உணவே உடலுக்கு ஏற்ற வன்மையைத் தருவது என்ற உண்மையை ஆட்சியினுங்காட்டிவருகின்றனர். ஏன்! காந்தியடிகளும் உணவின் திட்டவுண்மையைச் செவ்வன் கூறியுள்ளார். மேலும் திரு. மறைமலையடிகள் எழுதியுள்ள "பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்" என்னும் புத்தகத்தை எடுத்துப் படிக்கும் எவனும் புலால் உண்ணப் புறப்படமாட்டான். இறைவனால் படைக்கப்பட்டு, இயற்கைவனப்புவாய்ந்து மக்களை மகிழ்விக்கும் பல வண்ணப் பறவைகளையும், துள்ளித்திரியும் இளமான்களையும், மறிகளையும், ஏனைய குற்றமற்ற உயிர்களையும் கருவிகொண்டு உயிரை மாய்த்தலும், அதன் ஊனைத் தீயில் வாட்டித் தின்றலும் வீரமாமோ? வீரமென்பது அருளோடுகூடி அரும்புதல் வேண்டும்.

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்" (குறள்)

அருள் தோன்றுவதற்கு அடிப்படையாக வேண்டப்படுவது அன்பன்றோ? வள்ளுவரும் அன்பைத் தாயென்றும் அருளைக் குழவியென்றும் அறிவித்துள்ளார் என்பது "அருளென்னும் அன்பீன் குழவி" என்னும் குறட்பாவால் அறிவோம். ஆதலால் அன்போடும் அருளோடுங்கூடிய வீரமே மெச்சத் தக்க வீரமாகும்.

இன்னும் ஐம்பொறிகளை அடக்கி ஆளுவதும் வீரம் எனப் போற்றப்படுகிறது. இதனை "உரனென்னுந் தோட்டி யான் ஓர் ஐந்துங் காப்பான்" எனவும், "ஐந்தவித்தானாற்றல்" எனவும் வரும் குறட்பகுதிகள் வலியுறுத்தும். இவ்வாறாக நாம் வீரம்பெற்று வீரவாழ்க்கை நடாத்தவேண்டுமாயின், பண்டைப் பழம் வீரரின் சரிதங்களோடு தற்காலத்தெழும் வீரரின் சரிதங்களையும் கற்று, வீரவுணர்ச்சியுற்று இன்பம் எய்தி வீறுபெறுவோமாக!

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் - உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ. 2—0—0

கிடைக்குமிடம் ;-

மானேஜர்,

தருமபுர ஆதீனம், தருமபுரம்.

மாயூரம் போஸ்ட்.

அறத்துப்பால் கைவசம் இல்லை

5/11

அகத்தியர்

திருநெல்வேலியில் பொதியில் மலை என்ற பெயருடைய ஒரு மலைத்தொடர் இருக்கிறது. அதன் உயரம் ஆறாயிரம் அடிகளுக்கு மேலாகும். அதுவே அகத்திய முனிவர் இருப்பிடம்.

தமிழ்மொழியை வளர்த்த பெரியோர்களில் தலை சிறந்தவர் அகத்திய முனிவர். அவர் ஒரு மட்குடத்தில் தோன்றியதால் கும்பமுனி, குடமுனி, கும்பசம்பவர் எனப் பல பெயர்கள் பெற்றார். வடிவிற் சிறியவராக இருந்தமையால் அவருக்குக் குறுமுனி என்றும் ஒரு பெயருண்டு. திருந்திய முறையில் தமிழ்மொழிக்கு அவர் ஒரு இலக்கணம் எழுதினார். யோகம், மந்திரம், மருத்துவம், தத்துவம் முதலிய பல துறைகளிலும் பல நூல்களை அவர் எழுதியுள்ளதாகவும் கூறுவர், அதனால் அவருக்குத் தமிழ்முனி, தமிழ் வளர்த்தோன் என்ற பெயர்களும் உண்டு.

அகத்தியர் தமிழர் என்றும், ஆரியப்பார்ப்பனர் என்றும், திபெத்து நாட்டைச் சேர்ந்தவர் சமணர் என்றும் பலபடக் கூறுவர். அவர் சிவபெருமானிடத்திலும், முருகவேளிடத்திலும், சூரியனிடத்திலும், அவலோகித முனிவர் என்பவரிடத்திலும் கல்விகற்றார். நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவராய் அவர் சிறந்த தவசியாகவும் இருந்தார். வடமொழியிலும் தமிழ்மொழியிலும் நல்ல தேர்ச்சிபெற்று அவர் சிறந்த ஆசிரியராய் விளங்கினார். அவரிடத்தில் பாடங்கேட்ட மாணவர்கள் பன்னிருவர், அவர்கள் தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கர், செம்பூட்சேய், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழாரம்பர், அவிநயர், காக்கை பாடினியார், நற்றத்தனார், வாமனர் என்பவர்களாவர், இவர்களையன்றி இசைநுணுக்கம் என்ற இசைநூலினாசிரியர் சிகண்டி என்பவரும் இவருடைய மாணாக்கர் என்று கூறுவார்கள்.

அகத்தியனூர் மூன்றுமுறை மணமுடித்துக்கொண்டார். தற்பொழுது பீஹார் மாகாணம் என்று வழங்கும் விதர்ப்ப நாட்டரசன் ஒருவன் மகள் உலோபா முத்திரை என்பவளை அவர் முதலில் மணந்தார். தம்முடைய கட்டளையை மீறி நடந்ததற்காக அவளைச் சபித்துவிட்டுப் பின்னர், கவேர அரசன் மகள் காவிரியை மணமுடித்துக் கொண்டார். அவள் ஆருக மாறிவிடவே பின்னர் மூன்ருவதாக இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள கம்போடியா என்ற நாட்டில் அழகிற்சிறந்த யசோமதி என்பவளை மணந்தார். அப்பெண் வழி யசோ வர்மன் என்ற அரசனைத் தலைமையாகக்கொண்ட அரச குடும்பத்தைத் தோற்றுவித்தார். அவரைப்பற்றி வழங்கும் கதைகள் கணக்கில்லை.

விருத்திராசுரன் என்ற ஒருவன் இந்திரனைத் துன் புறுத்திக் கடலில் ஒளிந்துகொண்டான். கடல்நீரைத் தன் மகிமையால் உழுந்தளவாக மாற்றி, கையிலேந்தி உண்டு அவ்வசுரனை வெளிக்காட்டிக் கொல்வித்தார்.

அகத்தியர் இமயமலை அரசன் புத்திரி பார்வதிக்குத் திருமணம் நிகழ்ந்த காலையில் இந்தியாவின் வடகோடியில் தேவர்கள் யாவரும் ஒன்று கூடியதால், அவ்விடம் தாழ்ந்து தென்கோடி உயர்ந்தது. அதைச் சமன்செய்யச் சிவபெருமான் ஆணையுடன் தெற்கேவந்து சீர்படுத்தினூர்.

நாரதரால் ஏவப்பட்டு வானளவு உயர்ந்த மலையாகிய விந்திய பர்வதத்தைத் தம் தவவலிமையால் ஏறிக்கடந்து அதன் செருக்கை யடக்கினூர்.

விந்திய மலையின் அடிவாரத்திலுள்ள பஞ்சவடியென்ற இடத்தில் அவர் தங்கியிருந்தபோது இராமரைக்கண்டு அவ ருக்குப் பல உதவிகள் செய்தார்.

பஞ்சவடியைவிட்டுப் பாதாமி என்று இப்பொழுது வழங்கும் வாதாமிபுரம் வந்து அங்கு வழிப்போக்கர்களுக்குக் கேடிழைத்துவந்த இல்வலன் வாதாபி என்ற கொடியர்களை அழித்தார்.

பொதியமலை அடைந்து பக்கத்திலுள்ள காடுகளைத் திருத்தி நாடாக்கிப் பதினெண்குடி வேளிரையும் அருவாளரையும் அங்கே குடியேற்றினர்.

இலங்கையை ஆண்ட இராவணன் தம்மீது வெகுண்ட காலை தமது இசைத்திறனால் அவனை வென்று நட்புக் கொண்டார்.

பன்னீராயிரம் சூத்திரங்கள் கொண்டதாக 'அகத்தியம்' என்ற தமிழ் இலக்கணமொன்றை இயற்றினர். தென் மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் நிறுவி, அதில் காய்சினவழுதி என்று பாண்டியன் தலைமையில் அவ்விலக்கணத்தை அரங்கேற்றினர். சிற்சில சூத்திரங்களைத் தவிர அந்நூலின் ஏனைய பகுதிகள் இதுகாறுங் கிடைக்கவில்லை. இயல், இசை, நாடகம் என்று குறிக்கப்படும் தமிழின் முப்பிரிவுகளுக்கும் உரிய இலக்கணம் அதுவே எனக் கூறுவர்.

ஏறக்குறைய பதின்மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன்—அதாவது பாரத இராமாயண காலங்களுக்கு முன் இருந்தவராக அவர் கருதப்படுகிறர். அவர் எப்பொழுதும் சிவலிங்க வழிபாடே இயற்றிவந்தார். அவ்வழிபாட்டைத் தாம் செல்லும் நாடுகள்தோறும் பரப்பியும் வந்தார்.

இறுதியில் அவர் வானத்தில் அகத்தியர் விண்மீன் என்று குறிக்கப்படும் ஒரு விண்மீன் பதவியைப் பெற்றார்.

அகத்தீஸ்வரம், அகத்தியம்பள்ளி என்று அவர்பெயரால் பல ஊர்கள் வழங்கப்படுகின்றன. பல கோவில்களில் அவர் உருவச்சிலைகள் காணப்படுகின்றன.

(தருமை ஆதீன வித்துவானக இருந்து பல பணிகள் ஆற்றிக் காலஞ்சென்ற காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்களால் எழுதப்பெற்ற குறிப்புக்கள் இவை. அவர் திருமகளார் தருமபுர ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஹயர் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ B. முத்துலட்சுமி அம்மையார் தந்தவை.)

514

தருமபுர ஆதீனம் ஆவணிமூலத் திருநாள்

ஆதீனக்கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவில்,

திருவண்ணாமலையாதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக சுவாமிகள் அவர்களுக்கு

அளித்த வரவேற்புரை.

சொல்மழை பொழியும் கொண்டலே! வருக.

தமிழன் உழைப்புக்குத் தளராதவன்; உழைப்பே அவன் பிழைப்பு. வெய்யலில் உலருவான்; மழையில் நனைவான்; காற்றில் மிதப்பான்; கனலில் காய்வான்; எதற்காக? பிறர் வாழ்ந்து பெருஞ்சுகம் பெறுவதற்காக! அத்தகைய அருந் தமிழன் ஆத்மீகத்துக்காகவும் உழைத்த தனிப் பெருமை படைத்தவன். ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் சுகவாழ்வு வாழ்ந்த அவன், இன்று புறவாழ்வில் ஈடுபட்டுத் திசைமாறிப் போகிறான். அவனை நல்வழித்திருப்ப எழுந்த தங்களை மிக மிகப் பாராட்டுகிறோம்.

ஈழம் சென்ற இணையிலி! வருக.

தமிழகமும் ஈழமும் தாயும் மகளும்போல. தமிழகத்தின்பால் ஈழம் வைத்திருக்கும் பேரன்பும் ஈழத்தின்பால் தமிழகம் வைத்திருக்கும் தளராப் பெரும்பாசமும் எழுத்தில் அடங்காதன; சொல்லுக்கு அடங்காதன. அத்தகைய ஈழத்தில் இன்பத் தமிழ்மணத்தைச் சிவமணத்தோடுசேர்த்து வழங்கிய தங்களது உண்மைத் தொண்டை உரைக்காத பத்திரிகைகள் உண்டோ?

தாங்கள் அருள்நெறித் திருக்கூட்டம் அமைத்து, சொற்பணிசெய்வதை இருபதாம் நூற்றாண்டின் இளைஞர் உலகம் கேட்டுத் திருந்திவருகிறது; இத்தகைய இணையில்லாப் பணி

செய்துவரும் தங்களது வருகை கல்லூரிக்கே பெருமைதருவதாகும் என்றுகூறி எங்களது தலைதாழ்ந்த வணக்கத்தைத் தங்களது திருமுன் செலுத்துகின்றோம்.

தீந்தமிழ் வளர்க்கத் தில்லிக்குச் செல்வோய்!

தமிழ்விழா தமிழ்நாட்டில் நடைபெற்றால் மட்டும் போதாது; விண்ணையளாவும் விந்தியத்துக்கப்பால் கருத்தைக் கவரும் கங்கைப்பிரதேசத்திலே, தலைநிமிர்ந்துநிற்கும் இமயத்தின் மடியிலே நடைபெறவேண்டும் என்ற நோக்கால், தில்லியிலே நடைபெற இருக்கும் தீந்தமிழ் விழாவிலே தாங்கள் கலந்துபேருரை ஆற்ற இருப்பது தமிழ்நாட்டுக்கும், தமிழ் இனத்துக்கும், தருமைக்குமே தனிப்பெருமைதரும் என்ற துணிவால், எங்கள் உள்ளம் மலர்கிறது.

தருமை தந்த தமிழ்முனிவ!

தாங்கள், தருமைக் கல்லூரியில் கற்ற தமிழ் மாண்பையும், தருமையின் பெருமைகளையும் என்றும் மறவாத தன்மையராய் இருப்பதைக் கண்டு நாங்கள் பெரிதும் மகிழ்கிறோம். எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும் முத்தர் மனம் மோனத்திலே ஈடுபட்டிருப்பதைப்போல, தாங்கள் யாண்டு செல்லினும் தருமையினிடத்தே — தருமையில் வளரும் தண்டமிழிடத்தே — தமிழாய் மிளிரும் சொக்கலிங்கப் பெருமானிடத்தே ஈடுபட்டிருப்பதை எண்ணி எண்ணி இறும்பூது எய்துகிறோம். அம்மகிழ்ச்சிக்கு மீண்டும் தூண்டுகோலாக அமைந்திருப்பது, இறுதிநிலையில் கல்லூரி முதல்வராகத் தேறும் மாணவர்க்குத் தாங்கள் பொற்பதக்கம் வழங்கும் திருக்கை வழக்கம். இவ்வாறு எங்களது ஊக்கத்துக்கு எவ்விதத்திலும் ஆக்கந்தேடி, அன்பொழுக வாழ்த்தும் தங்கள் பொற்பாத கமலங்களைப் போற்றுகிறோம்.

தாங்கள் நெடுநாள் வாழ்ந்து, பணிபல புரியவேண்டும் என்று எல்லாம்வல்ல செந்தமிழ்ச்சொக்கர் திருவருளை மனமொழிமெய்களால் வாழ்த்தி வணங்குகிறோம்.

தருமையாதீனக் கல்விநிலைய ஆண்டுவிழாவில்:

விழாத்தலைவர்,

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்

அருளிய ஆசியுரை.

எனக்குத் திருவருள்காட்டி, காட்டாதன எல்லாம் காட்டி, சிவம்காட்டி, இன்பவெள்ளத்தைக் காட்டி, அதிலே திளைக்கச்செய்த ஞானத்தந்தைக்கும், அறிவுடைப் பெருமக்களுக்கும் வணக்கம்.

தேவரும் விரும்புகின்ற இந்தப் புண்ணிய பூமியிலே பிறப்பதும் புண்ணியம்; வாழ்வதும் புண்ணியம்; இறப்பதும் புண்ணியம். "பிட்டுக்கு மண்சுமந்த பெருமான்" வரலாறு அன்றொருநாள் தமிழ்மதுரையிலே நடந்தநிகழ்ச்சியை இன்று நினைவுபடுத்துகிறது. அந்த வரலாற்றிலுள்ள உண்மைகள், சைவத்தின் சார்பிலே - அருளின்பேரிலே மறைந்திருக்கின்றன. இந்த வரலாறு அருள்நெறியை - அன்புநெறியை வட துருவம்முதல் தென்துருவம்வரை உள்ள மக்களுக்கு நன்கு உணர்த்துகிறது. இன்றைய பேச்சு "பிட்டுக்கு மண்சுமந்த வரலாறு" இது இன்றைய சமுதாயத்திற்கு எதை உணர்த்துகிறது என்பதைத்தான் நாம் கவனிக்கவேண்டும்.

தமிழ்நாட்டிலே நல்லன பலவற்றைக்கொண்டு எழுந்த புராணங்கள் பல உண்டு. அவற்றுள் நடந்தன பல இருக்கலாம். சில கற்பனையாக இருக்கலாம். அது நடந்ததா? நடக்கவில்லையா? என்பதுபற்றிக் கவலை இல்லை. ஆனால் அது இந்த சமுதாயத்திற்குப் பயன்படுமா என்றுதான் பார்க்க வேண்டும்? ஏனென்றால் பெரும்பாலும் இளைஞர் கூட்டமாக இருப்பதால் இதைக் கூறுகிறேன். அறிவியலும் அரசியலுமே சமுதாயத்தைக் காப்பவை என்று கருதுகின்றவர்கள் இந்த அருள்நெறி வரலாற்றைப் படித்ததுண்டா? அல்லது எண்ணத்தான் செய்தார்களா? எண்ணி அதன்படி வாழ்ந்திருந்தால் இன்று இந்த நாட்டில் பஞ்சமும் பட்டினியும்

வாட்டுமா? சமுதாய நலம் கருதும் மக்கள் தவருது படிக்க வேண்டிய வரலாறு கடவுள் மண்சுமந்த வரலாறு.

விண்ணகத்தவரும் மண்ணகத்தவரும் வாழ்த்தும் இறைவன் இம்மண்ணிற்கு வந்தான்; கையில் மண்வெட்டியும் தலையில் தட்டும் தாங்கி நின்முன்; எல்லோரையும்போல மண்வெட்டினுன். ஏன்? எதற்காக? என்ற வினுக்களை எழுப்பி அதிலிருந்து கிடைக்கும் விடையைக் கொண்டு உண்மையை அறிந்துகொள்ளுங்கள். இந்தப் புராணத்தின் மூலம் மக்கட் சமுதாயம்பெறும் நற்செய்திகள் பற்பல. இந்த வரலாற்றிலே ஏழு முக்கியகருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை.

இன்றைய உலகு பொருமையிலே சிக்கிப் போரில் உழலுகிறது. இந்தநிலையில் சமாதானம் நிலவவேண்டும் என்று உலகப் பேரறிஞர்கள் கருதுகின்றனர். உலக சமாதானத்தைக் கருதி ஒவ்வொருநாடும் படைகளைப் பெருக்குதல் கூடாது என்று எடுத்துச்சொல்லி வருகின்றனர். படையின் பெருக்கம் மக்கட் சமுதாயத்தை அழிவுப்பாதையில் அழைத்துச் செல்லும் என்று சொல்லுகின்றனர். இப்படிப் பேசுகின்முர்களேயொழிய அது இன்னும் செயலில்வரவில்லை. சில நாட்களாகச் சமாதானக் காற்று வீசுகிறது. அதன் பயன் கொரியப் போர் நிறுத்தம். இது நீடித்து நிற்க இறைவனைப் பிரார்த்திப்போமாக. இந்தச் சமாதானச் செய்தியை மக்கட் சமுதாயத்திற்கு அன்றே திருவாசகத்தந்தை கொடுத்திருக்கிருர்.

படையைப்பெருக்கி, போர்செய்து பாராளுமன்னனுகவர ஆசைப்பட்டான் பாண்டியன். படைப் பெருக்கத்திற்காகப் பரிகளை வாங்கி வருமாறு மணிவாசகரைப் பணித்தான். அருள்பழுத்த மணிவாசகரின். மனம் சமுதாயத்தைப் போரினின்றும் காப்பாற்ற எண்ணியது. பரிகளை வாங்காது மக்கள் இனத்தை வாழ்விக்கும் திருப்பணியில் ஈடுபட்டது. இத்தகு சமாதான நற்செயல் தமிழ்நாட்டின் அருள்நெறியின்பாற்

பட்டதன்றோ? 'நீ அருள்நெறியை நம்பு; போரில் இருக்கிற மனத்தைத் திருப்பு; அருள் நெறியிலே—அறநெறியிலே—அன்பு நெறியிலே—பக்திமார்க்கத்திலே ஈடுபடு' என்று பாண்டியனுக்கு உணர்த்தினர் மணிவாசகர்.

இரண்டாவது நீதி ஒப்பற்ற நீதி. இந்த இடத்திலே வள்ளுவப் பெருமானின் வாக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

பகலில் குதிரையாக இருந்தது இரவிலே நரியாகமாறியது. இதிலிருந்து இன்பமயமாகத் தோன்றும் அனைத்தும் பின் துன்பமயமாகத்தான் தோன்றும் என்பதை உணர்த்தவே இந்த வரலாறு எழுந்தது என்று எண்ணுகிறேன்.

மூன்றாவது நீதி நல்லார் துன்பம் அடைந்தால் நாடு துன்பம் அடையும் என்பது. அந்தவகையிலே இயற்கையை எழுப்பிவிடுவான். இது உலகம் கண்ட உண்மை. அந்த முறையிலேதான் வைகையாற்றிலே பெரும் வெள்ளத்தைக் கிளப்பினான். துன்பத்தை மாற்றுதலும் இன்பத்தை உண்டாக்குதலும் பேச்சால் அல்ல; செய்கையால் என்பதை மாணிக்கவாசகரும், சோமசுந்தரரும் அன்றே உணர்த்தி விட்டனர். ஆனால் அரசியலார் இன்றுதான் பேச ஆரம்பி திருக்கின்றனர். உணர்ந்திருக்கின்றனர்.

நான்காவது நீதி நாட்டுக்கு மிகவும் நன்மை பயப்பது. நம் இறைவன் பொன்னுக்கும், பொருளுக்கும் மண் சுமக்க வில்லை. பிட்டுக்காக மண்சுமந்தான். இதிலிருந்து மனித சமுதாயத்திற்கு அவர் உணர்த்தியது 'உண்ணும் உணவுக்காக நீ பாடுபடு' என்பது. 'மற்றதை விரும்பாதே; விரும்பினால் நீ துரோகி' என்பதை உணர்த்தவே பிட்டுக்காக மண் சுமந்தான். விண்ணவரும் மற்றவரும் உணர்த்தாத நீதி இதில் உணர்த்தப்படுகிறது.

519

ஐந்தாவது நீதி அறநீதி. மக்கள் சமுதாயத்தில் தோன்றியவன், தான் மக்கள் சமுதாயத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யாவிட்டால் கண்டிப்பாகத் தண்டிக்கப் படுவான் என்பதைத்தான் வேலை செய்யாதவன்போல நடித்துப் பிரம்படிபட்டான் எம்பெருமான்,

ஆறுவது நீதி அன்புநீதி. எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் இருக்கிறுன் என்பதைத்தான் தம்மீதுபட்ட பிரம்படியை எல்லார்மேலும் படும்படிச்செய்த இறைவன் செயல் உணர்த்துகிறது. ஒவ்வொருவனும் தன் உயிர்போல் பிறவுயிர்களையும் காக்கவேண்டும் என்பதைத்தான் அன்று உணர்த்திஞன் பெருமான்.

ஏழாவது நீதி அருள்நீதி. அன்று காணமுடியாத காட்சியைத் தமிழகம் கண்டது. அன்று மாணிக்க வாசகரின் மணிமொழிக்குப் பேசாத ஊமையும் பேசிற்று. ஆனல் அதே திருவாசகம் நம்கையில் இன்று இருந்தும் - ஊமையல்லாத நாம் பேசுகின்ற வாயும், உணர்கின்ற நெஞ்சும் படைத்திருந்தும் திருவாசகம் பாடாது பாழ்பட்டுப் பயன் இழக்கின்ற நிலை இரங்கத்தக்கது. இந்த நீதிகளை எந்த அரசியல்வாதியும் சொல்லவில்லை. சொன்ஞலும் செய்யவில்லை. செய்து காட்டியவர் மணிவாசகத்தந்தை ஒருவரே. சிவனுரின் செந்நெறியே இதை நமக்கு உணர்த்துகிறது. இதை உணர்ந்து மாணவர்கள் நடந்தால்தான் தமிழ் நல்லநிலைமை அடையும், தமிழ்நாடு நல்ல நிலைமையை அடையும். இவ்வாறு இந்தச் சமுதாயத்திற்கு உணர்த்திய ஏழு நீதிகளையும் மறந்தால் நாம் வாழ முடியாது என்பதுதான் இப்பொழுது அறிந்துகொள்ள வேண்டியது.

இந்த 20-ம் நூற்றுண்டு, அணுவைப்பற்றி ஆராய்ச்சி செய்து அல்லல்படும் காலம். அணுவைப்பற்றியும் இன்னும் நன்கு தெரிந்து கொள்ளவில்லை. முதலில், அணுவைப் பிரிக்க முடியாது என்றனர், இப்பொழுது அணுவைப் பிரித்து

மாபெரும் சக்தியைக் இளப்பலாம் என்று கண்டார்கள். இதைப்பற்றி எல்லாம் அன்றே விரிவாக, தெளிவாக மணி வாசகர் உணர்த்திவிட்டார். அதை நாம்தான் நன்கு புரிந்து கொள்ளவில்லை.

[மேற்கூறியவை விழாத்தொடக்கத்தில் அருளிய தலைமை யுரையின் சுருக்கம். இனி வருபவை நாடகத்தின்பின் அருளிய ஆசியுரை.]

காணாத காட்சியை நாம் இப்பொழுது கண்டோம். நாடகத்தால் அவன் அடியார்போல் நடிப்பதையாவது நாம் கண்டோம். இந்த நாடகத்தில் மாணிக்கவாசகர் மணி மொழிக்கு, பேசாதஊமையும்பேசியதைக் கண்டோம். இதை உணர்ந்தும் திருவாசகத்தைப் படிக்காமல் இருப்பான் ஆனால் அவனுக்கு இந்தநாட்டில் வாழ்வு இல்லை. திருவாசகம் படிக் காதவரை தமிழனல்ல என்றுணர்த்தும் புதிய நியதியைக் கைக்கொள்ளவேண்டும். மக்களினம் திருவாசகத்தினுடைய பயன்படுபொருளைக் காண முற்படுதல்வேண்டும். மாணிக்க வாசகரின் பாட்டு அருளுடையோரை—அன்புடையோரை ஈர்த்து இம்மையோடன்றி எழுமையும் இறவாத இன்பத்தில் தோயச்செய்யும். அது அன்பு வளர்க்கின்ற பாட்டு, அருள் வளர்க்கின்ற பாட்டு. அது அருள் அமுதம். தமிழகம் முழு வதும் மாணிக்கவாசகர் பெயரால் மன்றங்கள், நிலையங்கள் ஏற்படவேண்டும். உண்மையிலே தமிழகம் உய்யவேண்டு மானால் மணிவ்ாசகர் மணிமொழி தவிர வேறு வழி இல்லை.

இன்று நாடகத்தில் மாணிக்கவாசகரை நாம் நேரில் கண்டதுபோல் இருந்தது. மணிவாசகராக நடித்தவர் ஒரு மணிவாசகப் பெருந்தகையே என்று சொல்ல ஆசைப்படு கிறேன். இன்று அவர் பெருந்தகையே. நாளை வேண்டுமானால் அவர் சாதாரண மனிதராகக் காட்சி அளிக்கலாம். நாடகம் உயர்ந்தமுறையில் அமைந்திருக்கிறது. யாவும் நல்லமுறை யிலே காணப்படுகிறது. மற்றும் அரசராக நடித்தவர் ஒரு பண்டிதர். பண்டிதர் பாண்டியராகவே நடித்தார். எல்லா வற்றையும்விட வந்தியாகநடித்த மாணவரிடம், மிக உயர்ந்த

நடிப்பையும் தோற்றத்தையும் கண்டேன். நான்கு ஆண்டுகளுக்குமுன் இதே இடத்தில் வந்தியாக நடித்த மாணவரை விட இவரிடத்தில் தன்னாமை மிகுதியாக இருந்தது பாராட்டத்தக்கது. இவரது தோற்றமும் நடிப்பும் வந்திப் பாட்டியையே நமக்கு ஞாபகப்படுத்தியது.

தமிழ்நாட்டுப் பெண்கள் யாவரும் திருவாசகத்தைப் படிக்கவேண்டும். மனோன்மணியத்தில் காப்புப் பாடவந்த ஆசிரியர் சுந்தரம் பிள்ளை (4) நான்கு கண்ணிகள் திருவாசகத்திற்காக ஒதுக்கி இருக்கிறார். இன்று இந்த நாடகத்தைக் கண்டு களிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி நம்மை நல்வழியில் வாழ்விக்க இங்கு எழுந்தருளியிருக்கும் தருமை ஞானத் தந்தைக்கு எனது வணக்கம். அவர்கள் ஆற்றும் அரும் பணிக்குத் தமிழகமே நன்றிசெலுத்த என்றும் கடமைப்பட்டிருக்கிறது. இத்துடன் ஏழிசையாய் இசைப்பயனாய் என்பது போல இசையிலும் இறை உணர்ச்சியை உண்டாக்கிய நாடக இசைக் குழுவினருக்கும் மற்ற யாவருக்கும் எனது நன்றி.

இன்று எமது குன்றக்குடி ஆதீனப் பரிசுபெற இருக்கும் ஆதீனக் கல்லூரி மாணவர் சொ. சிங்காரவேலனைப்பற்றி உங்கட்கு அதிகம் சொல்லவேண்டுவதில்லை. அவர் எங்கள் அருள்நெறித் திருக்கூட்டத்து அன்பர். அதில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவர் இன்னும் அறிவு முதிர்ச்சிபெற்று விளங்க இப்பரிசு ஒரு தூண்டுகோலாகும். இன்னும் இதுபோன்ற பல பரிசுகளைப் பெறப்போகின்றார். ஆகவே இந்தப் பரிசை அம்மாணவர்க்கு அளிக்கின்றேன். எங்கேயோ சென்று கொண்டிருந்த என்னை வலிய இழுத்து ஆளதுகொண்டு, தருமை ஞானசம்பந்தக் குழந்தையாக்கி, அரன்பணியாற்றச் செய்த ஞானத்தந்தையின் நன்றியை எண்ணி, அவர்கள் திருப் பெயராலேயே ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிசாக இது அமைக. எங்கும் சிவ மணம் கமழ்க, தமிழ்மணம் வீசுக, திருவாசகம் முழங்குக.

சைவ சித்தாந்தம்

(ஞானபாதம்)

ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம்
முத்து சு. மாணிக்கவாசக முதலியார் தமிழ்ப் பேராசிரியர்,
பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

இத்தலைப்பில் இனி, "ஞானசம்பந்தம்" சைவ சித்தாந்தத்தை உரைநடையில், தன்னைக் கற்றுவரும் எல்லோர்க்கும் ஓரளவு உணர்த்தலாம். அன்பர் போற்றிக்கொள்க.

சைவம் சித்தாந்தம் என்னும் இரண்டும்சேர்ந்த தொடரே சைவ சித்தாந்தம் என்பது. சைவம்—சிவசம்பந்தம் உடையது. சிவம் என்ற சொல்லின் திரிபே சைவம் என்பது. திலம் தைலம், விட்டுணு வைணவம் என்பவைபோல்வது இது.

சைவசித்தாந்தத்தை உணர்த்தும் நூல்கள் சிவாகமங்கள். அவை கடவுளால் அருளப்பட்டவை. அவ்வுண்மையைச் சிவஞான பாடியத்துள் தத்துவத் தோற்றம் உணர்த்தும் பகுதியில் தெளிவுறலாம்.

சிவாகமங்கள் நான்கு பிரிவால் சைவத்தை விளக்குவன. அந்நான்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப்படும், சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம் மூன்றும் உணர்ந்தவரே ஞானபாதத்தை உணரவல்லவராவர். இக்காலத்தில், பலர் அடிப்படை யுணர்ச்சியைப் பெற முயலாமல், முடிவைமட்டும் உணர விரும்புகின்றனர். அவ் விருப்பம் ஐயம் திரிபு நீங்கிய உணர்ச்சிக்கு எற்றதன்று.

அந்நான்கனுள், ஞானபாதமே சைவ சித்தாந்தத்தை உணர்த்துவது. ஞானபாதத்தை உணர்த்தும் நூல்களுள் இரு வேறுவகை உண்டு. பவுட்கரம், மிருகேந்திரம், மதங்கம் முதலிய சிவாகமங்கள் பொதுவியல்பை உணர்த்துகின்றன. சர்வஞ்ஞானோத்தரம் முதலிய சிவாகமங்கள் சிறப்பியல்பை உணர்த்துகின்றன.

பொது வியல்பாவது பெத்தத்தில் நின்ற நிலைபற்றிக் கூறும் இலக்கணம். சிறப்பியல்பாவது முத்தியில் நின்ற நிலை பற்றிக் கூறும் இலக்கணம். பொது வியல்பைத் தடத்த லட்சணம் என்றும், சிறப்பியல்பைச் சொரூபலட்சணம் என்றும் வடமொழியில் வழங்குவர். (பெத்தம்—கட்டு. முத்தி—வீடு)

அளவை நூலாற் கூறப்படும் பொதுவியல்பு சிறப்பியல்பு வேறு. அங்குப் பல பொருட்குப் பொதுவாய இலக்கணம் பொதுவியல்பென்றும், ஒருபொருட்கே உரிய இலக்கணம் சிறப்பியல்பென்றும் கூறப்படும்.

பொதுவியல்பை உணர அளவையும் இலக்கணமும் ஆகிய இரண்டும் உணர்வது இன்றியமையாதது. இவ்விரண்டும் உணர்வதாற் கிடைப்பதே பொதுவியல்பாகும். கேட்டல், சிந்தித்தல் என்னும் இருதிறத்தால் பொது வியல்பை உணரலாம்.

சிறப்பியல்பை உணரச் சாதனமும் பயனும் ஆகிய இரண்டனுணர்ச்சி இன்றியமையாதது. இவ்விரண்டனையும் உணர்வதாற் கிடைப்பதே சிறப்பியல்பாகும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு திறத்தாலும் சிறப்பியல்பை உணர்தல்வேண்டும். நான்கனுள் ஒன்று குறைந்தாலும் சிறப்பியல்பு உணர்ச்சி கிட்டாது. கேட்டவரும், சிந்தித்தவரும், தெளிந்தவரும், நிட்டை கூடியவரும் சைவ சித்தாந்தியராயினும், நிட்டை கூடியவர்க்குண்டாகிய சிவானந்தம் ஏனை மூவர்க்கும் எய்துவதில்லை.

இப்பொதுவியல்பையும் சிறப்பியல்பையும் உணராதவர் சைவசித்தாந்த ஞானத்தை அடைவது எக்காலத்தும் அரிதே.

சைவ சித்தாந்தத்துள் கூறப்படும் முப்பொருளுண்மையையும், அவற்றைப்பற்றிய பொதுவியல்பு சிறப்பியல்புகளையும் முதலில் அறிந்துகொள்ளல் வேண்டும். அம்முப் பொருளுணர்ச்சியைத் திரிபதார்த்த விவேகம் என்பர்.

முப்பொருளாவன பதி, பசு, பாசம் எனப்படுவனவாம். பதி கடவுளையும், பசு உயிர்களையும், பாசம் அக்கடவுளை

அடையவொட்டாமல் உயிர்களைத் தடைசெய்யும் சடப் பொருளையும் உணர்த்தும், இதை எங்கள் தருமை யாதீனத்து முதற்குரவராகிய குருஞானசம்பந்தர் அருளிய 'சிவபோக சாரம்' என்னும் உயரிய ஞானநூலுள், ஒரு திருவெண்பா மிகத் தெளிவுபடுத்துகின்றது.

அஃது

"என்னை அறிவென்றான் என்அறிவில் ஆநந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமும்—என்னை உன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந் தவர்முத்தர் ஆம்"

என்பது.

இதன் பொருளை உணர்வது இன்றியமையாதது.

இதில், 'என்றான்' என்ற மூன்றுவினையும் (குருஞான சம்பந்தர்க்குக் குருவாகிய) கமலை ஞானப்பிரகாசர் என்னும் தோன்றா எழுவாய்க்குப் பயனிலையாகும். அவர் இவரை நோக்கி,

1. 'நீ சித்து' (சடமல்லை) என்றார். அதை உணர்த்துவது 'என்னை அறிவு என்றான்' என்னும் முதலாவது வாக்கியம்.

2. 'உன் அறிவில் விளங்கும் இன்பமே (எல்லாம் கடந்த இடத்தில் விளங்கும் நித்யாநந்தமே) சிவம்' என்றார். அதை உணர்த்துவது 'என் அறிவில் ஆநந்தந்தன்னைச் சிவம் என்றான்' என்னும் இரண்டாவது வாக்கியம்.

3 என்னைப் பாராமல் உன்னை மறைத்ததுவே பாசம் (பதியைக் காணவொட்டாமல், பசுக்களை மறைத்து நிற்பதே பாசம்) என்றார். அதை உணர்த்துவது, 'என்னை உன்னைப் பாரா மறைத்ததுவே பாசம் என்றான்' என்னும் மூன்றாவது வாக்கியம்.

4. (முதல் வாக்கியத்தா லுணர்த்தப்பட்ட) பசு, (இரண்டாவது வாக்கியத்தால் உணர்த்தப்பட்ட) பதி, (மூன்றாவது வாக்கியத்தால் உணர்த்தப்பட்ட) பாசம் ஆகிய இம்மூன்றனையும் ஆராய்ந்து உணர்ந்து, பாசமும் பசுத்துவமும் நீங்கிப்

பதித்துவம் அடைந்து சிவமானவரே முக்தராவர் என்றருளி ஞர் கமலை ஞானப்பிரகாச தேசிகர். அதை உணர்த்துவது, 'இம்மூன்றும் ஆராய்ந்தவர் முத்தராம்' என்னும் நான்காவது வாக்கியம்.

குறிப்பு :- இவ்வாக்கியத்தில் உள்ள ஆம் என்பது செய்யு மென் கிளவி. அது பண்டு பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில் அமையாது.
அதனை,

'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளா'

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் அறியலாம். ஆயினும், இக்காலத்தில் செய்யும் என் கிளவி, கொள்ளா என விலக்கப் பட்ட அம்மூன்றிடத்தும் அமைகின்றது. மலையாளத்(தமிழ ரிடத்)தில் தன்மையிலும் பயின்று வழங்குகின்றது. முன் னிலையில் வழங்குவதை நம் வழக்கத்திலும் அறியலாம். கேளும் ஐயா என்பதே 'கேண்மியா' என்று மருவிற்று. இது தொல்காப்பியத்துக்கு முற்பட்ட வழக்கேயாகும். 'ஆராய்ந்தவர் முத்தர் ஆம்' என்று படர்க்கையில் வந்தது. வந்தாராம், போனாராம் என்னும் வழக்கும் இங்குக் கருதத் தக்கது. ஞானிகள் திருவாக்கில் வந்தவற்றையும் அமைந்தன வாக்கொண்டு இலக்கணத்தில் அமைப்பது சான்றோர் நெறி யிற்காண்க. இலக்கண நூல்களுள் உரையாசிரியர்கள் அமைப் பனவற்றை நோக்கின் இவ்வுண்மை தெரியும்.

இந்நான்கு வாக்கியங்களாலும் இவ்வாதீனத்து முதற் குரவர் தம் குருபதேசத்தால் அறிந்த திரிபதார்த்த விவே கத்தை (முப்பொருளுணர்ச்சியை) உணர்த்தியருளினர்.

இரண்டாவது வாக்கியத்தின் பொருளே, சொக்கநாத வெண்பாவில் (73) "ஒருநாளும் நீங்காது எனது அறிவில் நின்ற சுகாநந்தமே ஆம் காண் நீ சொக்கநாதா" என்றுணர்த் தலாயிற்று. என்னை உன்னிப் பாராமறைத்ததுவே என்ற பாடம் எவ்வாற்ருனும் பொருந்தாது. மலச்சார்பிருக்கும் வரையில் உயிர் இறைவனைப் பார்த்தல் ஆகிய தொழிலே

நிகழாது, உன்னிப்பார்த்தல் எங்ஙனம் நிகழும்? என்னை யுன்னைப் பாராமறைத்தது என்ற தொடரை முறைநிரனிறையாக்கொண்டு, என்னைப்பாராமல், உன்னைமறைத்தது என்று பொருள்கொள்ளல்வேண்டும். பழம் பதிப்புக்களில் உள்ள பாடமும் இதுவே.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள் பதியின் முன் பாசம் நில்லாது. அதனுல் பதியினிடத்துப் பாச ஞானம் நிகழ வழியில்லை. (உதாரணம்;- சூரியன் முன் இருள் நில்லாது. அதனுல் இருளறிவு சூரியனிடத்து நிகழ வழியில்லை),

பதியையும் உணர்வதும் பாசத்தை அறிவதும் பசுவே. (சூரியனையும் இருளையும் பார்ப்பது கண்ணே.) பூவின் மணத்தைத் தனியே (பூவின்றி) அறியவழியில்லை. பூவைச் சார்த்தி அறியலாம், அதுபோலப் பசுவையும் தனியே அறிய வழியில்லை. பாசத்தோடு நின்றும் பதியோடு நின்றும் பசு உணரப்படும். சூரியனுக்கும் இருளுக்கும் வேருய்க் கண் ணெளி காணப்படுமோ? சூரியனெளியோடு கூடியபோது கண்ணெளி புலப்படும். இருளுடன் கலந்தபோது கண் ணெளியில்லாமை புலப்படும். இருள் தன் உருவத்தைக் காட்டும். பொருளைக்காட்டாது. ஆணவமலம் தன் உரு வத்தையும் காட்டாது. ஏனைப் பசு பதியையும் காட்டாது.

"ஒருபொருளும் காட்டாது இருள்; உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது; (ஆணவமலம்).

இவ்வுண்மைக்கேற்பப், பதி, பசு, பாசம் மூன்றனுள், முதற்கண் எதனை உணர்த்தல்வேண்டும் என்று வினவலாம். (1) தன்னையுணர்ந்து தலைவனையுணர்தல். (2) தலைவனை யுணர்ந்து தன்னையுணர்தல் என்று இரண்டுண்டு. இவற்றுள் (1) ஆன்மசுத்திக்குப் பின் சிவப்பேறு பற்றியது முன்னது. (2) சிவரூபத்தால் ஆன்மதரிசனம் பற்றியது பின்னது. அதனுல். முதலில், பசு (உயிர்) பற்றிய விளக்கம் எழுதப் படுகின்றது.

(தொடரும்)

மதிப்புரை

1. **திருக்குறள் – பொருட்பால்—பரிமேலழகர் இலக்கணக் குறிப்பின் விளக்கம்:–** ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபரன் சங்கத்தின் விஜய ஆவணித்திங்கள் வெளியீடு. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அருளாதரவு பெற்றது. பதிப்பாசிரியர், பனசை செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால் வித்துவான், திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் M. A., B O L தமிழ்வித்துவான் பயிலும் மாணவர்கட்குப் பெரிதும் துணைபுரியும் என்பது இதன் நோக்கம் என்று விளக்கவுரையாசிரியர் வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் முன்னுரையில் குறித்துள்ளார். பொருட்பாலிலுள்ள 350 குறள்களில் 35 குறள் உரைகளிற்கண்ட இலக்கணக் குறிப்பிற்கு இதில் விளக்கம் தரப்பெற்றுள்ளது. கிரௌன் சைஸ் 16 பக்கம் கொண்ட இதன்விலை அணா 2. வேண்டுவோர் ஷை சங்கத்திற்கு எழுதிப் பெறுவார்களாக.

2. **திருமுருகாற்றுப்படை விளக்கம்:** திருச்சி சிவநேசச் செல்வர், புலவர். திரு. R. பஞ்சநதம்பிள்ளை அவர்கள் திருச்சி வானொலி நிலையத்தில் திருமுருகாற்றுப்படையைப்பற்றி நிகழ்த்திய ஆறு அருமையான சொற்பொழிவுகள் இதில் உள்ளன. ஷை புலவர் அவர்களின் மணிவிழாமலராக வெளிவந்துள்ளது இது. ஒரு சிறந்த உரைநடைநூல். ஆங்காங்கும் இடையிடையே ஆற்றுப்படை அடிகளை அமைத்திருப்பது படிப்போர்க்குப் பெருவிருந்தாகிறது. முன்பு இவர்கள் வெளியிட்ட அற்புதக்கனியை அன்பர்கள் நுகர்ந்திருப்பர். அது போல உலகம் இதனையும் ஏற்றுப் பயன்படுத்திக்கொள்வதாக. ஸ்ரீ சுவாமி சித்பவாநந்தா அவர்களின் ஆசியும் இந்நூலுக்குக் கிடைத்துள்ளது. கிரௌன் சைஸ் பக்கம் 48. வெளியிட்டோர், திருக்குறள் விளக்கம் ஆசிரியர் திரு. G. வரதராஜன் அவர்கள் B. A. வேண்டுவோர் ஆசிரியரிடம் பெறலாம்.

3, **செப்பறைக் கனகசபைநாதன் உலா:—** இது செப்பறை மடாலய பரம்பரையில் கி. பி. 1620-ல் மூன்றாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர் என்பார் தம்

குருவாகிய கனகசபைநாதன்மீது இயற்றிய தோத்திரப் பிரபந்தம். அப்பரம்பரையில் 14-வது பட்டமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அழகியகூத்த தேசிகர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. திருத்தொண்டர் புராணத்தில் பேசப்பெறும் நாயன்மார் வரலாறுகள் முழுவதும் இதில் இடம்பெற்றுள்ளன. சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் நேராகவும் உவமை வாயிலாகவும் விளக்கப்படுகின்றன. 649 கண்ணிகள் கொண்டு சொற்சுவை பொருட்சுவையுடன் திகழுகிறது இப்பிரபந்தம். பழுத்த தமிழ்ப் புலமையுடன், முதிர்ந்த ஆண்டிலும் தமிழ்ப்பணியில் தளரா உளங்கொண்டு ஈடுபட்டு ஒல்லும்வாயெல்லாம் செயலாற்றி வருகின்ற பெருநாவலர், பேராசிரியர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்கள், இதுகாறும் ஏட்டுச்சுவடியில் மறைந்திருந்த இப்பிரபந்தத்தைப் பரிசோதித்து, தமிழுலகிற்கு உபகரித்திருக்கிறார்கள். ஆசிரியரின் பெருமுயற்சி உலகம் பாராட்டும் ஒரு உயரிய செயலாகும். கிரௌன்சைஸ் பக்கம் 51. விலை அணா எட்டு. தபாற்கூலி தனி.

4. திருக்குறள் திறவு :— தமிழ்மக்களின் கருவூலமாகிய திருக்குறளுக்கு இத் திறவுகோலைத் தந்து உபகரித்தவர்கள் சேலம் கல்லூரித் தமிழாசிரியர் வித்துவான், திரு. க. நடேச உடையார். அவர்கள், திருக்குறள் பாடவகுப்பு முறையாக நடத்தும்போது தமக்குத் தோன்றிய சில கருத்துக்களில் பொருட்பால் இறைமாட்சி யதிகாரத்தைப் பற்றியவை மட்டும் இந்நூலில் தந்துள்ளார்கள். பிற்சேர்க்கையாகச் சில கட்டுரைகளும் தரப்பட்டுள்ளன. அந்த வகையில் முதலில் உள்ளது 'வள்ளுவர் பாகுபாடும் அழகர் மாறுபாடும்' என்ற கட்டுரை. இதில், பொருட்பால் இயல்பாகுபாடு பலதிறப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டி, அவைகளில் போக்கியார் பாடிய திருவள்ளுவமாலை செய்யுளிற்கண்ட ஏழதிகாரப் பிரிவே இயைபுடையது என ஆராய்ந்து முடிவுகட்டியுள்ளார்கள். இது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை. அடுத்தபடியாக பலர் கொள்கையைத் தனித்தனிக் காட்டக்கூடிய அட்டவணை தரப்பட்டுள்ளது. இதனை இயல் அதிகாரக் கண்ணாடி என்று சொல்லலாம். இறுதியில் 'இயற்றலும் வகுத்தலும்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட அரிய கட்டுரையும் இருக்கிறது. இத்தகைய சிறந்த நூலை, சேலம் திருவள்ளுவர் கழகத்தினர், கழகத்தின் முதல் வெளியீடாக வெளியிட்டுள்ளார். விலை விபரம் தெரியவேண்டுவோர் ஷை கழகத்திற்கு எழுதிக்கொள்வார்களாக.

529

தருமபுர ஆதீனத்தில்

ஆவணிமூலத் திருநாள் நிகழ்ச்சி

ஆதீனத்தில் ஆத்மார்த்த பூஜாமூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான். அப்பெருமான் மதுரைமாநகரில் விண்புகழ் முடி மிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும் மணிவாசகரை விளக்கங்கண்ட நாள் ஆவணிமூல நன்னாள். அந்நாள் ஆண்டுதோறும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும், அன்று கொண்டாடப்பெறும். அந்த முறைப்படி இந்த ஆண்டிலும் 20-8-53 வியாழக்கிழமையன்று ஆவணிமூல விழாவும், ஆண்டுவிழாவும் நடைபெற்றன.

வழக்கம்போல் ஆதீன மடாலய முகப்பு அலங்கரிக்கப்பெற்றிருந்தது. பெருமான் பூஜைமடத்திலும் நறுமணமுள்ள பூக்களாலும், இலைகளாலும் அழகுசெய்யப்பட்டிருந்தது. காலை 10-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பூஜைக்கு எழுந்தருளி முறைப்படி அபிஷேக ஆராதனைசெய்து பூஜித்து வழிபாடாற்றினார்கள். வெளியூர் அன்பர்களும், கல்விநிலைய ஆசிரியர்களும் மாணவர்களும் கூட்டமாக இருந்து இறைவழிபாடும் குருவழிபாடும் நிகழ்த்திக் கொண்டார்கள். யாவருக்கும் திருநீறு வழங்கப்பெற்றது. 12-மணிக்கெல்லாம் மாகேஸ்வர பூஜையும் சிறப்பாக நடைபெற்றது.

மாலை 6-மணிக்கு ஆண்டுவிழா தொடக்கம்: விழாத் தலைவர் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 5மணிக்கெல்லாம் காரில் ஆதீனத் தேவாரபாடசாலைக் கட்டிடத்தில் எழுந்தருளியானார்கள். கல்விநிலைய மாணவர்களும் ஆசிரியர்களும், ஆதீன அடியார் பெருமக்களும், அன்பர்களும் முகப்பிலேயே சிவநாமமுழக்கஞ்செய்து ஆர்வத்தோடுவரவேற்று ஆசனத்தில் எழுந்தருளுவித்து, வணங்கித் திருநீறு பெற்றுக் கொண்டார்கள். பிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சனமுடித்து அநுட்டானாதிகளை நிறைவேற்றிக்கொண்டார்கள். மணியும் ஆறு ஆயிற்று. மங்களவாத்தியம் ஒலிக்க

சிவநாம முழக்கத்துடன் அங்கிருந்தபடியே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை அழைத்துக்கொண்டு ஆதீன மடாலய முகப்பிற்கு அன்பர்கள் வந்துசேர்ந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நி தானம் அவர்களும், மேடைமீது அவர்களுக்கென அமைக்கப் பெற்ற ஆசனத்தில் எழுந்தருளியானுர்கள். தருமை மகாசந்நி தானம் அவர்களும் வழிபாடுமுடித்து விழாவிற்கு விஜயமாகி இருந்தார்கள். மணி ஏழு. கூட்டந் தொடங்கிற்று.

ஆதீனத்தேவாரப் பாடசாலை ஆசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவார் அவர்கள் கடவுள் வாழ்த்தாகச் சில திருமுறைப் பாடல் களைப் பாடினர் அடுத்து ஆதீனக் கல்வி நிலையங்களின் சார் பாக அச்சிடப்பெற்றிருந்த வரவேற்பு நன்மலரை, திருச்சி மௌனமடம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வாசித்து, ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களிடம் சமர்ப்பித்து, தருமை மகாசந்நிதானம் அவர்களின் ஆக்ஞைப்படி பொன்னுடை சார்த்தி, மலர்மாலை சூட்டி உபசரித்தார்கள். நிழற் படம் எடுக்கப்பெற்றது. குன்றக் குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வரவேற்பு உபசாரத்தை அன்போடு ஏற்றுக்கொண்டு நிகழ்ச்சியிற் கண்டவாறு முன் னுரையாகச் சில அருளுரை வழங்கினர்கள். அதில் ஆவணிமூல விழாவின் தத்துவங்களும். விழாவிலிருந்து மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய நீதிகளும் எடுத்து விளக்கப்பெற்றன. அருளுரைக்குப்பிறகு ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் வித்து வான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் விழாவில் கலந்து கொள்ள இயலாத அன்பர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளையும், ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டறிக்கை களையும் வாசித்தார்கள். அடுத்த நிகழ்ச்சி பட்டம் வழங்கல்.

இக்காலத்தில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்கின்ற அறிஞர்கள் பலர். அவர்களில் சென்னை லேடி வெலிங்டன் கல்லூரியில் விஞ்ஞானப் பகுதியின் பேராசிரியராக விளங்கும் ஸ்ரீ. E. T. இராஜேஸ்வரி அம்மையார் B. A., L. T. அவர்களும் ஒருவர். ஆனாலும் அம்மையார் அவர்கள், விஞ்ஞானத்தைப் பண்டித ரும் பாமரரும் புரிந்துகொள்ளுமாறு எளிய இனிய தமிழில் எழுதும் ஆற்றல் படைத்தவர்கள்; அதுமட்டுமல்ல; விஞ் ஞானம் மெய்ஞ்ஞானத்திற்குத் துணையாகக்கூட இருக்கின்றது

531

என்பதையும் அவர்கள் கட்டுரை காட்டும், இவ்வாறு இரு ஞானத்தையும் தொடர்புபடுத்திக்காட்டும் ஆற்றல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளத்தையும் பிணித்தது. பிணிக்கவே புலவர்களின் தகுதியறிந்துபோற்றும் பெருங்குணம் படைத்த தருமை மகாசந்நிதானம் அவர்கள் ஆண்டுதோறும் செய்துவரும் வழக்கம்போல் இந்த ஆண்டு ஆவணிமூல விழாவில் அம்மையாருக்குப் பட்டம் வழங்கத் திருவுளம்கொண்டார்கள். அத்துடன் அவர்கள் எழுதிய கட்டுரைகளையும் தொகுத்து "பரமாணுப் புராணம்" என்ற பெயருடன் ஆதீன ஆவணிமூல வெளியீடாக அச்சிட்டு வழங்கினார்கள். நிகழ்ச்சியிற் குறித்தபடி திரு. அம்மையார் அவர்களுக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் "விஞ்ஞானச் செல்வி" என்ற பட்டம் அளித்து, அது பொறிக்கப்பெற்ற பொற்பதக்கத்தையும் வழங்கியருளினார்கள். அம்மையார் அவர்களும் அடிபணிந்து ஏற்றுக் கொண்டு, தம்மையும் ஓர் பொருளாக்கி ஆண்டு அருள்பாலித்த தருமை மகாசந்நிதானம் அவர்களுக்குத் தமிழின் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். 'சத்தியும் சிவமும்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவும் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து ஆதீனப் பல்கலைச்செல்வர் சென்னை திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M. A., B. L., M. O. L. அவர்கள் பாராட்டுரை கூறுமுகத்தான் ஆதீனத்தின் தொண்டுகளையும் மகாசந்நிதானம் அவர்களின் அருங்குண நலங்களையும் சிறப்பாக ஆதீனக் கல்லூரியினையும் பாராட்டிப் பேசினார்கள். மணியும் ஒன்பது ஆயிற்று.

காலங்கடந்ததன் காரணமாக, பரிசுபெறுதற்கு உரிய ஆதீனக்கல்விநிலைய மாணவர்களின் பெயர்கள்மட்டும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டன. பரிசுகள் பின்னர் வழங்கப்பட்டன.

இறுதி நிகழ்ச்சி நாடகம். பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் வரலாறு நாடக உருவில் நடித்துக் காட்டப் பெற்றது. மூல விழாவிற்கு ஏற்ற கதை. கதையில்வரும் பாத்திரங்கட்கு ஏற்ற நடிகர்கள். நடிகர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் அந்தந்த பாத்திரங்களாகவே ஆகிவிட்டார்கள். 'நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து' என்றுகூட பிட்டுக்கு மண்சுமக்கச்

செய்த பெருமானாகிய மாணிக்கவாசக சுவாமிகளே அருளியிருக்கிறார்கள். ஆனால் நாடகக் காட்சிகளைக் கண்ட ஒவ்வொருவரும் 'இது உண்மைக்கதையல்லவா! நாடகம் என்று எப்படிச் சொல்வது?' என்று எண்ணினார்கள். விழாத்தலைவர் குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களோ நாடக முடிவில் அந்தக் கருத்தை வாய்விட்டுச் சொல்லிவிட்டார்கள். மணிவாசகராக நடித்தவர் மணிவாசகராகவே ஆகிவிட்டார். அவர் பாட்டு கல் மனத்தையும் கரைத்துவிட்டது. பாண்டியனாக நடித்த பண்டிதரும் தன்னை மறந்தனர். வந்திக்கிழவியும் அப்படியே. இப்படி ஒவ்வொருவருடைய நடிப்புத் திறமையையும் மகாசந்நிதானம் அவர்கள் பாராட்டி அனைவர்க்கும் ஆசியருளினார்கள், பிறகு யாவர்க்கும் விருந்தளிக்கப்பெற்றது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனப் பரிசு

தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி வித்துவான் இறுதிநிலை வகுப்பில் கல்லூரி முதல்வராகத் தேர்கின்ற முதல் மாணாக்கருக்கென குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் "பொற்பதக்கப் பரிசு" த்திட்டம் அமைத்துள்ளார்கள். இத்திட்டம் 1952-ல் ஏற்படுத்தப்பெற்றது. ஆனாலும் இந்த ஆவணி மூல விழாவில்தான் முதலாவதாக அப்பரிசு வழங்கப்பெற்றது. பரிசு வழங்குகின்ற ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களையே நேரில் தருமைக்கு எழுந்தருளச்செய்து, பரிசுவழங்கும் விழாவிலே தலைமையும் ஏற்கச்செய்து, அவர்கள் திருக்கரத்தாலேயே அப்பரிசையும் முதன்முதலாக அம்முதல்மாணாக்கர்க்கு வழங்கச் செய்து, ஆசியும் அருளச்செய்த – எல்லாம்வல்ல சித்தரான செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளின் திறத்தை என்னென்பது! ஆகவே அத்திட்டத்தின்படி நாடக முதலில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், 1953 மார்ச் தேர்வில் கல்லூரி முதல்வராகத் தேர்ந்த முதல் மாணவன் வித்துவான், சொ. சிங்காரவேலனுக்குத் தமது ஆதினப் பொற்பதக்கப்பரிசு அளித்து, ஆசியும் வழங்கியருளினார்கள்.

533

தருமபுர ஆதீனப் பிரசாரம்

14—8—53 ஆடிமீ கடைவெள்ளியன்று மாலை 4-மணிக்குத் தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரியிலும், இரவு 8 மணிக்கு மாயூரம் குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் குமாரவிலாஸ் மண்டபத்திலும், 19—8—53 புதன் கிழமை மாயூரம் முனிசிபல் ஹைஸ்கூலிலும் ஆதீனப் பிரசாரம் நடைபெற்றது. ஆதீன சமயத்தொண்டர் திரு. மருள்நீக்கியார், வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், சித்தாந்த ரத்னுகரம், மதுரகவி, புலவர், திரு. முத்து, சு. மாணிக்க வாசக முதலியார் ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

தருமபுர ஆதீன சமயத் தொண்டர், சிவநேசச் செல்வர் திரு. மருள்நீக்கியார் அவர்கள் 23-8-53 அன்று திருக்கருகாவூர், ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி ஆலயத்திலும், 24—8—53-ல் கரம்பத்தூர் பாரதிசேவாசங்கத்திலும், 25—8—53ல் கோவிந்த நல்லூர் விநாயகர் கோயிலிலும் தருமபுர ஆதீனப்பிரசாரத்தின் சார்பில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

26—8—53 புதன்கிழமை ஜெம்புகம்பாள்புரம் மாரியம்மன் கோயிலில் கருகாவூர் வட்டம் கர்ணம் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் திரு. மருள்நீக்கியார் தமிழன்பண்பாடு பற்றியும், கருகாவூர் ஸ்ரீ மகாதேவகுருக்கள் காளிதாஸன் கவிதைகளைப்பற்றியும், பரங்கிவெட்டிகாடு திரு. அ. சு. ராசமாணிக்கம் நாட்டின் இன்றையநிலைபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

27—8—53 அன்று மாலை மாயூரம் கூறைநாடு முனிசிபல் ஹைஸ்கூலில் ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும், கல்லூரி மாணவர்களும் சமயப் பிரசாரம் செய்தார்கள்.

27—8—53 வியாழன் பரிதிநியமம் ஸ்ரீ மங்களநாயகி சமேத ஸ்ரீ பார்க்கரேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்திலும் காலையிலும் பிரசாரம் நடைபெற்றது. ஸ்ரீ மகாதேவ குருக்கள் கும்பாபிஷேக தத்துவத்தைப் பற்றியும் திரு. மருள்நீக்கியார் திருஞானசம்பந்தரைப் பற்றியும், சொற்

பொழிவு நிகழ்த்தினார்கள். மாலையில் தஞ்சை ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் திரு மருள்நீக்கியார் திருநாவுக்கரசரைப்பற்றியும், ஸ்ரீ K. S. ஹரிகிருஷ்ணபாகவதர், அடியார் பெருமையைப் பற்றியும், கம்பர்நத்தம், திரு. சேஷாசல ஆர்சுத்தியார் தருமையின் சமயப்பணியைப் பற்றியும் பிரசங்கம் நிகழ்த்தினார்கள்.

28—8—53 மாளிகைத்திடல் மகாலக்ஷ்மி எலிமெண்டரி ஸ்கூலில், ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்கள் தலைமையில் பிரசங்கம் நடைபெற்றது. ஸ்ரீ மகாதேவ குருக்கள், ஸ்ரீ சம்பந்தம், ஸ்ரீ விஸ்வநாத குருக்கள் ஆகியோர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். திரு. மருள்நீக்கியார் குழந்தை உள்ளம் என்பதுபற்றிப் பேசினார்.

30—8—53 ஞாயிறு மாலை 6½ மணிக்கு திருவலஞ்சுழியில் நடைபெற்றது. 'என்னபுண்ணியஞ்செய்தனை நெஞ்சமே' என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

இரவு 8 மணிக்குச் சுவாமிமலையில் வழிபாடு நடைபெற்றது. ஷை ஊர் சன்மார்க்க சங்க அருள்நெறித் திருக்கூட்டத்தின் சார்பில் 9 மணிக்குமேல் ஆதீனத்தொண்டர் திரு. மருள்நீக்கியார் 'அருள்நெறியும் நமது சமயமும்' என்பதுபற்றி அரிய பிரசங்கம் நிகழ்த்தினார்கள்.

31—8—53 திங்கட்கிழமை திருக்கருகாவூர் ஸ்ரீ முல்லைவன நாதசுவாமி தேவஸ்தானத்தில் பிரசாரம் நடைபெற்றது. 'ஆலய வழிபாடு'பற்றிப் பேசினார்.

1—9—53 செவ்வாய்க்கிழமை ஒன்பத்துவேலி ஸ்ரீ நவநீத கிருஷ்ணஸ்வாமி கோயிலில் நடைபெற்றது. ஸ்ரீராசகோபால பிள்ளை அவர்கள் தலைமையில் ஸ்ரீ மகாதேவகுருக்கள் 'ஆலய விளக்கம்' என்பதுபற்றியும், திரு. அய்யாறு 'பக்ததுருவன்' என்பதுபற்றியும், திரு. மருள்நீக்கியார் 'கம்பரும் கச்சியப்பனும்' என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். தலைவர் தருமைப்பணியைப்பாராட்டி முடிவுரை நிகழ்த்தினார்கள். ஆலய நிர்வாகி திரு. சீனுவாச முதலியார், திருக்கூட்டத்தை வரவேற்று உபசரித்தனர்.

535

திருச்சி - இராமநாதபுரம் ஜில்லாவில்
தருமபுர ஆதீன சமயத்தொண்டு

[வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.]

(சென்றமாதத் தொடர்ச்சி)

பழமை காட்டும் பண்பாடு:

புதுக்கோட்டை டவுன் ஹாலில் பொதுக் கூட்டத்திற்கு அன்பர்கள் ஏற்பாடு செய்தார்கள். 23—7—53 மாலை 6 மணி. தொண்டினைத் தொடங்கினேம். டாக்டர். திரு. இராஜரத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினர்கள். குழுவினர், பண்டைய இலக்கியங்களைப் படித்தறிந்தவர்களும், கல்லெழுத்துக்களைக் கண்டுணர்ந்தவர்களும், சரித்திர ஆராய்ச்சி சாரம் பெற்றவர்களும், புதைபொருளாய்வில் மதியுடன் பட்டவர்களும்; கடவுள் உண்டா எனவும். கடவுள் வழிபாடு அவசியமா எனவும் வினவார்கள்; இவற்றை உள்ளவாறு உணர மாட்டாத ஒருசில மக்களே நாத்திக வாதிகளாக நடமாடுகின்றனர்; அத்தகைய நாத்திகரின் சிறப்பை வள்ளுவர் வாய்மொழியால் தெளியுங்கள் எனக்கூறி முடிவாக

"உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத் (து)
அலகையா வைக்கப் படும்"

என்ற திருக்குறளைக் கூறி முடித்தோம். திரளான மக்கள் கூடிக் கேட்டு இன்புற்றார்கள். திருச்சி மாவட்டச் சுற்றுப் பிரயாணத்தை இத்துடன் முடித்து இராமநாதபுர மாவட்டத்திற்குச் செல்லத்தலைப்பட்டோம்.

தருமை தந்த தவச்செல்வம்:

குன்றக்குடி, திருவண்ணுமலையாதீனம் திருப்பெருந் திரு. தெய்வசிகாமணி அருணாசலதேசிக சுவாமிகளைத் தமிழ் உலகம் நன்கு அறியும், அவர்களது அருள்நெறித் தொண்டினை ஈழமும் அறிந்து மகிழ்வெய்துகிறது. இத்தகைய அடிகளாரை, எங்கள் தருமையாதீனம் ஈன்று தமிழகத்தினுக்கு ஈந்தது என்பதனை

எண்ணும்போது எங்கள் உள்ளம் பெருமிதமடைகின்றது. எங்கள் மகாசந்நிதானமவர்களின் உள்ளம்,

"ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்றவள்ளுவர் வாய்மொழிக்கு இலக்காகின்றது. உவகை உள்ளம் படைத்த எங்கள் ஞானத்தந்தையவர்கள், இராமநாத புரமாவட்டத்தில் தொண்டு என்ற உடனே தருமைதந்த தவஞானச் செல்வத்தின் ஆணைவழி இயங்குக என உத்தர விட்டார்கள். அதன்வழியே குன்றக்குடி அடிகளாரின் திருவடிகட்குத் தெரிவித்தோம். அவர்களும் அன்போடு அருள்நெறித் திருக்கூட்டத்தின் ஆதரவில், இருபது ஊர்கட்கு மேலாகத் திட்டம் வகுத்து, நிகழ்ச்சியும் அச்சடித்து ஆங்காங்கு அறிவித்து ஆவன செய்தார்கள்.

தொண்டு முந்தியது :

புதுக்கோட்டையில் மூன்று நாள் தங்கிவிட்டபடியால் எங்கள் தொண்டினை நிகழ்ச்சியின்படி அருள்நெறித் திருக்கூட்டத்தினர் மேற்கொண்டனர். நாங்கள் 24—7—53ம் நாள் காலையில் புறப்பட்டுக் கீழச்சிவப்பட்டி சென்றதுமே விபரந் தெரிந்துகொண்டோம். குன்றக்குடிக்குப் புறப்பட்டோம். அருள்நெறித் திருக்கூட்டத்தினர் இரட்டைமாட்டு வண்டியில் எதிரே வந்தனர். தொண்டு முந்தியது அறிந்து மகிழ்ந்தோம். அனைவருக்கும் எங்கள் வாகனம் இடந்தந்தது. கீழச் சிவப் பட்டிச் சிவன்கோயில் முன்னிலையில் பிரசாரம் நடைபெற்றது. பள்ளி மாணவர்களும், ஊர்ப் பொதுமக்களும் உவந்து கேட்டனர். அடுத்து, குருவிக்கொண்டான்பட்டிக்குச் சென்றோம். நடுத்தரப் பள்ளியில் அருள்நெறி அன்பர் பலர் வரவேற்புச் செய்தனர். தாய்மார்களும் இளைஞர்களும் குழுமியிருந்தனர். ஞானசம்பந்தர் நானில மக்கட்கு நல்கிய நன்மையினையும், உண்மைத் தத்துவங்களையும் எடுத்துரைத்துக் கூட்டத்தை முடித்துக்கொண்டு இராங்கியத்திற்குப் புறப்பட்டோம்.

தருமைதந்த தமிழ்ப்புலமை

புலமை என்பது அறிவு. அறிவு, ஒரு இடத்தினுக்கே உரியது, ஒரு காலத்தினுக்கே உரியது என உரையாதவர்கள்

அறிஞர்கள். அதனுற்றான் நாம், சங்ககாலப் புலமையைப் பெறமுடிகிறது. மேலைநாட்டுப் புலமையை மேற்கொள்ள முடிகிறது. இதற்கேற்பவே தருமையில் அமைக்கப்பெற்றுள்ள கீழ்த்திசைக் கல்லூரியின் மூலம் பல மாணவர்கள் தமிழ்ப் புலமை யெய்தப் பெறுகிறார்கள். அவர்களுள், வை. சு. தண்ட பாணி, வை. சு. ஆறுமுகம், ரெ. இராமாநுசன் முதலிய ஒரு சில புலவர்கள் இராமநாதபுரமாவட்டத்தில் தமிழ்த்தொண்டும், சமயத்தொண்டும் புரிந்து வருவதைக்கண்டு மனமகிழ்ந்தோம். இராங்கியம் சிவகாமிஅம்பாள் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரி யராகப் பணியாற்றி வருகின்ற திரு. வை. சு. தண்டபாணி அவர்களும், உரிமையாளர் செட்டியாரவர்களும், பொதுமக்களும் அருள்நெறித் திருக்கூட்டச் சார்பில் வரவேற்றனர். பிள்ளையார் கோயிலில் கூட்டம் தொடங்கியது. திலகவதியாரின் தவம் திருநாவுக்கரசரைச் செந்நெறியில் திருப்பியது; நாவரசர் வாழ்வு நமக்கெல்லாம் எந்தவகையிலும் எடுத்துக்காட்டாக உதவு கிறது; ஆகவே நமது வாழ்வில் அவர்களது வாழ்வியலைப் பயன் படுத்துவோமாக என்று தொண்டர்கள் பேசினார்கள்.

குன்றக்குடியில் குடியிருந்தோம் :

கல்விற்கும் கடவுளுக்கும் நீண்டநாளாகத் தொடர்பு உண்டு. மலையினுக்கும் முருகனுக்கும் தொடர்பு அதிகம். மலைக்கு உரியவன் முருகனே என்ற பொருளில் "மலை கிழ வோனே" என நவில்கின்றார் நக்கீரர். ஆண்டவன் கல்விலும் மலையிலும் குடியிருக்கின்றான் என்றால் அவனுடைய அடியவர் கட்கும் அங்கே குடியிருக்க உரிமையுண்டு என்பது சொல்லா மலே விளங்கும். மேலும் திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அங்கு அருளாட்சி நடத்துதலின் உரிமை சற்று அதிகமாகியது. இராங்கியத்தில் தொண்டினை முடித்த அன்றிரவே குன்றக்குடியில் குடிபுகுந் தோம். மறுநாட்காலையில் எங்கள் ஆன்மார்த்த வழிபாட்டினை முடித்துக்கொண்டு மகாசந்நிதானத்தைத் தரிசிக்கச்சென்றோம். ஸ்ரீ காளத்தியார் பூசை நடந்துகொண்டிருந்தது. ஸ்ரீ காளத்தி நாதனைக் கண்ணாரக்கண்டு தொழுது, மகாசந்நிதானத்தையும் தெரிசித்தோம். குன்றக்குடியினில் இருந்துகொண்டே திட்ட மிட்ட இருபது ஊர்களிலும் நீங்கள் சென்றுசென்று பணி புரியலாம் என அன்போடு ஆணையருளினார்கள்.

தொண்டர் படை :

எவற்றையும் விட்டுக்கொடுக்கின்ற மன உணர்வில்—பொறுமையின் சிகரத்தில்—அன்பின் அடிப்படையில் முளைக்கப்பெறுவதுதான் தொண்டு. பிறர்நலங்கருதி வாழும் தொண்டர்களாலே தான் நாடுநலம்பெற முடியும். அரசியல் தொண்டர், சமூகத் தொண்டர், சமயத் தொண்டர் எனத் தொண்டர்கள் பலதிறப்படுவர். தொண்டர்கள் அவர்கட்குரிய இலட்சியத்தை நழுவ விடுவார்களேயானால் பயனடையவோ - அடைவிக்கவோ இயலாது. இன்று அரசியல் தொண்டர்படை கொரிய சமாதானத்திற்காகக் கடல் கடந்து செல்கிறது. அன்று மாணிக்கவாசகர் மாயப்படையுடன் போர்செய்ய ஒரு தொண்டர்படை திரட்டினார். அத்தகைய தொண்டர்படை இன்றுதேவை. குன்றக்குடி அடிகளாரவர்கள் அறிஞர்களையும், இளைஞர்களையும் கொண்ட ஒரு தொண்டர்படை திரட்டியுள்ளார்கள். அத்தொண்டர்களில் இவ்விரண்டுபேரையும், ஆதீனத் திருக்கூட்டத்தடியவர்களையும், ஓதுவாமூர்த்திகளையும், தேவார இன்னிசை முழக்கம் செய்யும் இளங்குழந்தைகளையும் எங்களுடன் அனுப்பியுதவினார்கள். அடிகளாரவர்களும் பல இடங்கட்கும் எழுந்தருளி நல்லுரை வழங்கினார்கள்.

நன்றும் தீதும் :

25—7—53 மாலை மூன்றுமணிக்கு ஆ. தெற்கூரைச் சென்றடைந்தோம். அவ்வூர் உயர்நிலைப்பள்ளியில் கூட்டந்தொடங்கியது. சிவபுராண முழக்கத்துடன் வீதிவலம் வந்து பள்ளி வாயிலை அணுகினோம். தருமைதந்த தமிழ்ப்புலவர் திரு. R. இராமாநுசம் அப்பள்ளியில் தமிழாசிரியராகத் தொண்டாற்றுவது அறிந்து மகிழ்ந்தோம். நிறைந்த கூட்டத்தினிடையே சொன்மாரி தொடங்கப்பெற்றது. "நல்ல எண்ணமும், நல்ல சொற்களும், நற்செயல்களும் நம்மைகுளிரச்செய்துவாழ்விக்கும். தீய எண்ணமும், தீய சொற்களும், தீய செயல்களும் நம்மை வெம்மையில் ஆழ்த்தித் துன்பத்தை விளைவிக்கும். இக்கருத்துக்களை ஔவைப்பிராட்டி அழகாக அறிவிக்கிறார். ஆண்டவன் எல்லார்க்கும் நல்லவன்; நன்மையே அவனிடம் குடிகொண்டு இருக்கிறது. ஆதலால் நல்லவனாகிய அவனை நினைத்தலும்,

அவன் திறம் பேசுதலும், அவன்செயலில் ஈடுபடுதலும் நம்மைக் குளிர்ந்த இன்பவாழ்விலே ஈடுபடுத்தும்'' என நவின்றேம்.

அன்பும் அருளும் :

அடுத்து நெற்குப்பைக்குப் புறப்பட்டோம். அருள்நெறித் தொண்டர்களாய திரு. கதி. சுந்தரமவர்களும், திரு. R. இராமானுசமவர்களும் எங்களுடன் தொண்டாற்றவந்தனர். நெற்குப்பையில் செட்டியார் சத்திரத்தில் கூட்டத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. கோயில் வழிபாடு முடித்து, சிவபுராண முழக்கத்துடன் சத்திரவாயிலைச் சார்ந்தோம். பெருந்திரளான கூட்டத்தினிடையில் பேசத் தொடங்கினேம். "அன்பு தொடர்பு உடையாரிடத்துச் செலுத்தப்பெறுவது; அருள் அனைவரிடத்தும் செலுத்தப்பெறுவது. அன்பும் அருளும் பருவமாற்றம் அடைகிறதேயன்றி அடிப்படையில் அன்பும் அருளும் ஒன்றே. இதனை வள்ளுவர்,

> "அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியால் உண்டு"

என்ற குறளால் விளக்கிக்காட்டுகிறார். இவ்விரண்டினையுமே தமிழர்கள் கடவுளாக-அம்மையப்பராக வழிபட்டனர். சிவத்திற்குச் செயலின்றாகலின் சிவத்தை அன்பாகக் கண்டார் திருமூலர். சத்தி செயலுடையது; கருணைநிறைந்தது, ஆகலின், சத்தியை அருளுருவாகக்கண்டார் அருணந்திசிவம். அடியவர்கட்கு ஆண்டவன் அருள்வழங்குமிடத்தெல்லாம் 'அருட்கருணை தானாய திருவுள்ளமுடைய தவவல்லியுட'னேயே தோற்றம் அளித்தார் எனச் சேக்கிழார் சிறப்பித்துக் கூறுவர். ஆகவே, தமிழருடைய வழிபாட்டுமுறை அன்பையும் அருளையுமே அடிப்படையாகக்கொண்டது'' எனப் பேசிமுடித்தோம். சொன்மாரி முடிந்ததும், விண்மாரி தொடங்கியது. மக்கள் மனம் மகிழ விடைபெற்றுத் திரும்பினேம் குன்றக்குடிக்கு.

(தொடரும்)

5470

தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகம்

தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தின் சிறப்புக் கூட்டம் 8—9—53 செவ்வாய் மாலை 4-30 மணிக்குத் தொடங்கியது. சென்னை முன்னாள் மேயர் திரு. சு. இராமசாமி நாயுடு அவர்கள், தாம்செய்த மேல்நாட்டுப் பிரயாணத்தின்போது அனுபவித்த அனுபவவுரையை எடுத்துரைத்தார்கள். கல்லூரித் தலைவர் ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் M. A. B. L. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். திரு. நாயுடு அவர்கள் பேச்சின் சுருக்கம் வருமாறு :-

அன்பு உருவான ஸ்ரீ சாஸ்திரி அவர்களுக்கும், தண்டமிழ் ஆசிரியர் தண்டபாணி தேசிகர் அவர்களுக்கும் மற்றுமுள்ள ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எனது வணக்கம். திரு. சாஸ்திரி அவர்கள் என்னைப்பற்றிக் கூறியதெல்லாம் 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்' என்பதற்கு ஏற்பப் பேசியதே ஒழிய வேறு இல்லை. நான் தருமைக்குப் புதியவன் அல்ல. நான் மேலை நாடுகளைச் சுற்றிவிட்டு இரண்டு தினங்களுக்கு முன்தான் சென்னைக்கு வந்தேன். மூன்றாவது நாள் தருமைக்கு வந்து குருமகாசந்நிதானத்தின் ஆசியைப்பெற்றேன். எனக்குப் பிரயாணத்தின்போது எவ்வித மாறுதலும் இல்லை. புலாலுண்ணாமை என்னும் கொள்கையைக் கடைப்பிடித்ததால் உடலில் சிலமாற்றம் ஏற்பட்டிருக்கிறது மேலைநாடுகளில் கண்ட உண்மை என்ன? அங்கு புலால் உண்ணாதவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மன வலிமையும், நுண்ணிய அறிவும் படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உண்ணும் உணவில் மிகவும் கவனம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். தான் உண்ணும் உணவில் என்ன சத்து இருக்கிறது என்று அறிந்து உண்கிறார்கள். நான் மேலைநாடுகளைப் பார்த்ததைப்பற்றிப் புத்தகங்களில் எழுதமுடியாத சில செய்திகளையும் கருத்துக்களையும் உங்களுக்கு இப்பொழுது கூறுகிறேன்.

541

மேலைநாடுகளில் பிரயாணம் செய்துகொள்வதற்கு ஆதாரமான விமானத்தைப்பற்றி முதலில் நீங்கள் ஓரளவு தெரிந்துகொள்ளவேண்டும். நான் பிரயாணம்செய்த விமானத்தின் பெயர் 'டக்கோட்டா' என்பது. அதில் (23) இருபத்திமூன்று பேர்கள் தான் போகலாம். விமானத்தின் இயக்க சம்பந்தமாகச் சுமார் நான்கு பேர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களில் ஒருவர் விமானம் ஓடும் வேகத்தையும், அது நிற்கும் உயரத்தையும் இவைகளைப்பற்றி ரேடியோவின் மூலம் விமான நிலையத்தில் உள்ளவர்களுக்கு அனுப்புகிறார்கள். விமானத்தில் பிரயாணிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்கப் பணிப்பெண் ஒருத்தி உண்டு. அப்பணிப்பெண் நமக்கு வேண்டிய வசதிகளை செய்துதருவாள். விமானம் அதிக உயரத்தில் செல்லும்பொழுதும்கூட நமக்கு வேண்டிய வசதிகளை அந்த அம்மையார் செய்து தருகிறார்கள். விமானத்திலே தபால்கள் எழுத வசதி உண்டு. நமக்கு வேண்டிய பானம் முதலியனவும், உணவு வகையான ரொட்டி பழங்கள் முதலியனவும் கொடுக்கப்படும். விமானத்தில் உள்ள குறைகளை எழுத புகார்புத்தகம் ஒன்று உண்டு. அதில் நமக்கு உள்ள குறைகளை எழுதிவைத்துவிட்டால் சில மணி நேரத்தில் அந்தக் குறை நிவர்த்திசெய்யப்படும். நான் சென்ற விமானம் மணிக்கு 300 மைல் வேகத்தில், 17,000-க்கு மேல் 20,000 அடியளவில் பறந்தது. நாங்கள் மேகமண்டலத்திற்கு அப்பால் சென்று இருந்ததால், அங்கு மழை இல்லை. மேகமண்டலத்தையும் நன்கு கவனிக்க முடிந்தது. மழை பெய்தாலும் போவதற்கு ஏற்ற முறையில் (4) நான்கு இயந்திரங்களுடன் விமானம் செய்யப்பட்டிருக்கிறது. கப்பலில் 15 நாள் செல்லும் தூரத்தை விமானத்தில் 7¾ மணியில் நாங்கள் முடித்தோம். இத்துடன் மற்றொரு செய்தியும் உங்களுக்குக் கூற வேண்டும்.

நமது நாட்டினின்றும் மற்ற நாடுகளுக்குச்செல்ல பாதுகாப்பு அனுமதிச்சீட்டு வாங்கவேண்டும். அதற்கு அரசாங்கத்தின் அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் விண்ணப்பம் கொடுத்தபின் அவர்கள் உங்களைப்பற்றி நன்கு விசாரிப்பார்கள். நீங்கள் யார்? எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்கள்? உங்களுக்குச் சொத்து என்ன இருக்கிறது? இது போன்ற சிலவற்றைத் தெரிந்துகொண்ட பின்தான் உங்கள்

விண்ணப்பப் பத்திரம் அனுமதிக்கப்படும். நீங்கள் வெளிநாடு களுக்குப் புறப்படுமுன்பு டாக்டரிடம் உங்கள் உடலைப் பரிசோதித்து, சில தடுப்பு ஊசிகளைப் போட்டுக்கொள்ள வேண்டும்.

மேல்நாடுகளைச் சுற்றிப்பார்ப்பதற்கு, வேண்டிய வசதி இருக்கிறது. அவர்கள் நீங்கள் பார்க்கவேண்டிய இடத்தைப் பற்றியும், அதன் மார்க்கத்தைப்பற்றியும், அந்த இடத்தின் வரலாற்றைப்பற்றியும் ஒரு குறிப்புநூல் ஆங்கிலத்தில் கொடுக்கிறார்கள். அது மிகவும் உபயோகமானது. அதுமாதிரி நம் நாட்டில் செய்வதில்லை. உலகம் முழுவதும் சுற்றவேண்டு மானால் ஆங்கிலம் அவசியம் தெரிந்திருக்கவேண்டும்.

மேலைநாட்டில் அரசன்மகனாய் இருந்தாலும் சரி; செய்த குற்றத்திற்காகக் கண்ணோட்டம் இல்லை. ஆங்கிலேயர் ஆட்சி யால் அவர்கள் மொழி நாகரீகம் சிறந்தது. பிறநாடுகளுக்குச் சென்றவுடன்தான் அந்நாட்டு மொழி, பழக்கவழக்கம், நாட்டுப் பற்று முதலியன நன்குதெரிகிறது. பழமையைப் பாராட்டுவதில் ஆங்கிலேயர்கள் தலை சிறந்தவர்கள். ஷேக்ஸ்பியர் போன்ற கவிகள் 700 ஆண்டுகளுக்குமுன் பயின்ற இடம், நடித்த நாடக மேடைகள் முதலியனவற்றை இன்று நமக்குக் காட்டுகின்றனர். பாராளும் மன்றத்தில் எல்லாக் கட்சிகளும் உண்டு. அவர்கள் அரசியல் சம்பந்தமாக வெவ்வேறு கருத்துக்கள் கொண்டவராக இருக்கிறார்கள். ஆனால் நாட்டின் கல்வி நிலையில் யாவரும் ஒத்தமனப்பான்மையுடன் இருக்கிறார்கள். நாட்டின் கல்விக்காக 75% செலவு செய்யவேண்டும் என்று எல்லாக் கட்சிக்காரர் களும் ஒற்றுமையுடன் ஓட்டுச் செய்கிறார்கள். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்சு முதலிய கல்விநிலையங்களில் கற்கும்கல்வி நமது குருகுலக் கல்விமுறையை எனக்கு நினைவூட்டியது. அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் ஐயம் திரிபறக் கற்கிறார்கள். நான் மேலை நாடுகளில் மாணவன் என்றநிலையிலேயே சுற்றினேன்.

ரயில் பிரயாணம்செய்யும்பொழுது சில முக்கிய செய்திகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டி இருக்கிறது. அவர்கள் ரயிலில் அமைதியாகவே பிரயாணம் செய்கிறார்கள். ஏதாவது பேச வேண்டுமானால் ரயில் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது பேசு

கிறுர்கள். புகைவண்டி நிலையங்களில் எப்பொழுதும் அமைதியாக யாவரும் நடந்து செல்லுகிறுர்கள். நடபாதையில் நடந்து செல்லும்முறை மிகவும் வியக்கத்தக்கதாக இருக்கிறது. காரில் உள்ள ஹாரன்களை அவர்கள் அடிக்கடி உபயோகிப்பதில்லை. ரோடுகளை மிகவும் சுத்தமாக வைத்திருக்கிறுர்கள். அவற்றில் வேண்டுமானுல் படுத்து உறங்கலாம்; அவ்வளவு தூய்மையாக அவர்கள் வைத்திருக்கின்றுர்கள். எல்லாவற்றையும் விட ஜெர்மனியில் பாதையின் அமைப்பு மிகவும் அழகானது. நேராக அமைந்தது. நாம் எளிதில் ஐந்து மைல் தூரத்தில் உள்ள தோற்றத்தையும் பார்க்கலாம். கார்கள் செல்லவேண்டிய வேகத்திற்கு ஏற்ற பாதைகள் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஹாரன்சப்தம் கேட்கவேண்டிய அவசியமே இல்லை. மக்களுக்கும் போக ஒருவழியும் வர ஒருவழியும் உண்டு.

மேலை நாடுகளிலுள்ளவர்கள் வைத்துக்கொள்ளும் பெயர் முறை ஒருவர் ஒருவரைப் பிரித்துக் காண்பிப்பதற்காகவே அன்றி வேறல்ல. அவைகள் காரணப் பெயர் அல்ல. ஒருவன் பெயர் Mut. மற்றெருருவன் பெயர் Wood. எனக்கு உதவி செய்வதற்காக விடப்பட்டிருந்த பெண்பெயர் Mis. Broud. அவள் என்னிடம் வந்து ஹிந்துமதம் என்றுல் என்ன? என்று கேட்டாள். நான் அவளுக்கு அதை விளக்கிவிட்டு எங்கள் மதத்தில் மதம் மாற்றம் என்பது கிடையாது என்று கர்வமாகக் கூறினேன். அவள் என்னை Mr. Broud. என்று நினைத்துக்கொண்டு விழித்தாள். அவள் உரையாடல் செய்வதற்கு வரும்பொழுது தன் நண்பர்களையும் அழைத்துவந்து நம் நாட்டு நாகரிகம் முதலியவற்றைத் தெரிந்துகொண்டாள். நான் லண்டனில் உள்ள ரேடியோ நிலையத்திற்குத் தமிழில் பேசுவதற்காக அழைக்கப்பட்டேன். நான் பேசியதற்காகத் தமிழ் அன்னைக்குக் காணிக்கையாக 6 வராகன் எனக்குக் கொடுத்தார்கள். அவர்கள் தமிழ் மொழியைக் கேட்பதில் மிகவும் ஆர்வம் உள்ளவர்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன்.

நான் லண்டனில் இருந்து சுசர்லாந்தை அடைந்தேன், அங்கு எல்லாம் கூட்டுறவு முறையில் பொருள்களைத் தயார் செய்கிறுர்கள் நம் நாட்டிற்கு வரும் கடிகாரங்களில் பெரும்

பகுதி அங்கு செய்யப்பட்டது. அங்கு வெளிநாடுகளுக்குத் தாங்கள் தயாரித்தபொருளில் 22% தான் அனுப்புகிறார்கள். இவைகளைப்பற்றி எல்லாம் விரிவாகப் பல சமயங்களில் பேசுகிறேன். காலம் ஆகிவிட்டபடியால் ஒரு சிலவற்றைக் கூறி எனது பேச்சை முடிக்கிறேன். நாங்கள் ஸ்விட்சர்லாந்தைவிட்டு பிரான்ஸ் தேசத்தை அடைந்தோம். அந்நாடு நாகரிகத்தில் சிறந்தது. ஆண் பெண் இருபாலரும் நாகரிகத்தில் உயர்ந்தவர்கள். பேச்சு, எழுத்து முதலிய சுதந்திரம் நிறைந்த நாடு. இங்குதான் விலை உயர்ந்த வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் படுகின்றன. நான் எவ்வளவோ உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டி இருக்கிறது. நான் தருமைக்கு வரும் பொழுது எல்லாம் உங்களுக்கு இதைப்பற்றிக் கூறுகிறேன்.''

என்று பேசிமுடித்தார்கள். பிறகு செயலாளர் M. சிவசம்பு நன்றி கூறக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

உபதேச மொழிகள்

1. ஆலநிழலிலிருந்தும் ஆலமரத்தைத் தேடி அலைவாரைப்போல நின்னடியின் கீழிருந்தும் நின்னைத் தேடி அலைந்தேன்: காட்டுவாரில்லாமையால்.

2. என் கையில் ஞானவாள் இருக்கின்றது. கனவிலும் அஞ்சேன். என்னை யார் என்ன செய்யமுடியும்?

—குருஞானசம்பந்தர்.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-௵ புரட்டாசி-௴ 1-௳ முதல் 30-௳ முடிய)
(17—9—53 முதல் 16—10—53 முடிய)

1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதி கார்த்திகை முதல்பாதம் பரணி 4-ம்பாதம் உள்ள மேஷராசி பலன் சுபங்களையும் தனவரத்தையும், தொழில் ஏற்றத்தையும் தரும். பரணி 1, 2, 3 பாதங்கள் சம்பந்தப்பட்ட மேஷராசியின் பலன் உத்யோக பங்கம், பெருத்தகலகம், இடம் மாறல், அஞ்ஞாதவாசம்போல் இருத்தல், நம்பினவனே மோசம் செய்தல், அவமானம், நஷ்டம் இவைகளைத் தரும். புதனும் சனியும் சுபமாகும்.

2. விருஷபம்: கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$.

கார்த்திகை மிருகசீரிஷம் இரண்டும் சென்ற மாதம் போலவே நடக்கும். ஆனால் அதிகச் செலவின்பேரில் அனுகூலம் காட்டும். மனமாறுதலும், நல்லோர் பெரியோர் உபசரித்தோர் முதலியவர்களிடம் காரணமில்லாத கோபமும் உண்டாகும். வருங்காலத்தின் அசுபத்தைத் தெரிவிக்கும். ரோஹிணியின் பலன் மிசிரமாயும் வைத்தியச் செலவுகளும் பிரயாணமும் கொடுக்கும். வெள்ளிக்கிழமை சுபமாகும்.

3. மிதுனம்: மிருகசீரிஷம் $\frac{1}{2}$, திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

மிருகசீரிஷம் பின்னரையும் திருவாதிரையும் அதிகச் செலவுகளை கொடுக்கும். வேலை நிர்ப்பந்தம் ஏற்படும். உத்யோக மாறுதல் உண்டாகும். தொழில் நஷ்டத்தில் ஓடும். புனர்பூசத்துக்குச் சதாதொல்லையும், நாஸ்திகர் பழக்கமும், அலக்ஷிய புத்தியும், நஷ்டமும், பந்துமித்திராளுடைய சோக சமாசாரமும் ஆப்த பந்துவுக்குக் கஷ்டங்களும் கொடுக்கும். சனி சுபவாரமாகும்.

4. **கடகம்:** புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

ஆயில்யத்துக்குப் பூரண சுபமுண்டாகும். சுபவிரயங்களும், எதிலும் வெற்றியும், ஏராளமான தனலாபமும், சந்தோஷமும் உண்டாகும். மற்ற இருநக்ஷத்திர பலனும் துன்பத்தைத்தரும். விவசாய நஷ்டம், சத்துருவிருத்தி. ராஜாங்க விரோதம், கலகம், விதவா ஸ்திரியால் தொல்லே. தொழில்நஷ்டம், இடம் மாறல் இவைகளை உண்டுபண்ணும். புதனும் சனியும் சுபமாகும்.

5. **ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகத்துக்கும் பூரத்துக்கும் சுபபலன் தரும். ஆரோக்கிய பிராப்தி, சத்துருமைத்திரம், நஷ்டதன வரத்து, விவசாய விருத்தி, உத்யோக லாபம், பெரியோர் நேசம், தூரயாத்திரை முதலியவைகள் நடைபெறும். உத்திரம் முதல்பாத பலன் மிகுந்த கவலேயுடன் காலம் ஓடும். நடுத்தர வகுப்பார்கள் சிரமப்படுவார்கள். விவசாயிக்கு ஈதிபாதைகள் அதிகமாகும். சனி வியாழன் சுபம் தரும்.

6. **கன்னி:** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரம் பிற்பாதி விசேஷ நன்மைதரும். உத்யோகம் விருத்தியாகும். சுப சமாசாரங்கள் வந்துகொண்டிருக்கும். மேலோர் பெரியோர் அன்புகிட்டும். மனம் சந்தோஷமடையும். ஹஸ்தம் 1, 4 பாதங்கள் வியாதியைத் தரும். உஷ்ணரோக முண்டாகும். பதவியிலிருப்பவர்களுக்கு இடைஞ்சல்காட்டும். சித்திரை முன்னரை சுபம் தரும். விவஹாரம் ஜயிக்கும். சத்துரு நாசமுண்டாகும். மனம் சந்தோஷமடையும். புதனும் வியாழனும் சுபம்தரும்.

7. **துலாம்:** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை சுவாதி இரு நக்ஷத்திரபலனும் தெய்வபலத்தைத் தரும். இஷ்ட தேவதானுக்கிரஹம் பூர்ணமாகக் கிடைக்கும். நிதி தனம் கிடைக்கும், குல பரம்பரையான தோஷமும் துர–திருஷ்டமும் நீங்கும். சத்துருநாசம் ஏற்படும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும், விசாக நக்ஷத்திர பலன் அசுபத்தையும் நஷ்டத்தையும் கவலேயையும் கொடுக்கும். புதன்கிழமை சுபம் தரும்.

8. **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் நாலாம்பாதமும் அனுஷமும் சுபம்தராது, எதிலும் ஆலஸ்யத்தையும் நஷ்டத்தையும் கொடுக்கும். ரோகம், ரிணம், சத்துருபாதை அதிகமாகும். கேட்டைக்கு மிசிரமாய் நடக்கும். சுபத்தோடு மங்கள சமாசாரங்களும் அடிக்கடி வந்துகொண்டிருக்கும். வியாபாரிகளாகில் நஷ்டமும் கஷ்டமும் ஏற்படும், வியாழன் நலன்தரும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் பூராடம் சுபமேசெய்யும். உத்யோகலாபம். விவசாயத்தொழில் ஓங்குதல், கீர்த்தி பத்திரம் கிடைத்தல், தூரத்தி விருந்து அழைப்புக் கடிதம் வருதல் முதலிய சுபங்கள் நடைபெறும். உத்திராடத்துக்கு மிசிரமாய் நடக்கும். சரீரத்தில் ரண சிகிச்சையைத் தரும். சுக்கிரவாரம் சுபமாகும்.

10. **மகரம்:** உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

திருவோணத்துக்கு எதிர்பாராத அளவில் நிலைக்கு மேற்பட்ட உத்யோக லாபமும், பெரியோர் அன்பும் கிட்டும். மற்ற இரண்டுக்கும் சமபலனாக நடக்கும். எதிலும் ஏற்றமும் இறக்கமும் இராது. பிராமணனால் கவலைகாட்டும். புதனும் வியாழனும் சுபம் தரும்.

11. **கும்பம்:** அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

மூன்று நக்ஷத்திரபலனும் சந்தோஷத்தைத் தரும். தொழில் ஓங்கும். இல்லறசுகம் விருத்தியாகும். வம்சவிருத்தி சின்னங்கள் உண்டாகும். உத்யோகம் கிட்டும். விவசாயத்தில் விசேஷ லாபம் ஏற்படும், ராஜாங்க கௌரவபட்டங்கள் உண்டாகும். அதிகவேலையால் சிரமம்காட்டும். ஆனாலும் லாபமாகவே இருக்குமாதலால் சிரமம் பறந்துபோகும். தெய்வபக்தியும் பெரியோர் அன்பும் கிட்டும், வெள்ளி சனி சுபவாரமாகும்,

5748

ச

12. மீனம்: பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

ரேவதிக்குப் பூரணசுபம் தரும். உபகாரம்கிட்டும். தொழில் ஓங்கும். மனஸ்தாபம்தீரும். விவஹாரம் ஜயிக்கும். சத்துருக்கள் சரணடைவார்கள். மற்ற இரு நக்ஷத்திரபலனும் கலந்து நடக்கும். வரவும் செலவும் சமமாகும். சபாபிரவேசமும் கௌரவப் பட்டங்களும் மேன்மையும் உண்டாகும். மூன்றுபேருக்குமே மாதக்கடைசியில் எதிர்பாராத நன்மைகள் கிட்டும், சந்தோஷமுண்டாகும். ஞாயிறு வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :— கோசார பலன்கள் தசாபுத்தியை அனுசரித்து நடந்தாலும் பிரபஞ்ச வர்த்தமானங்கள் கோசாரப்படியேதான் நடக்கும். இவ்வருஷம் அமைந்திருக்கும் கிரஹசஞ்சாரம் பிற்பாதிமுதல் அதாவது ஐப்பசிமாதம்முதல் சுபிக்ஷத்தைத் தரக்கூடியதாய் இருக்கிறது. ஆனாலும் மஹாஜனங்களின் புண்ணிய பாபத்துக்குத்தக்கபடி அந்தந்த தேசங்களில் பலன் காட்டும். ஆகையால் மஹாஜனங்களுக்குக் கடவுள், சத்புத்தியையும் திருடபக்தியையும் கொடுத்து, உலகம்பூராவும் சுபிக்ஷத்தையே தந்து அருள்புரிவாராக. சுபம்.

உ

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

29

திரு. ஓ. வி. அழகேசன் அவர்கள்,
டெல்லி.

* * ஆதீனத்திலிருந்து வெளியிடப்பெற்ற திருஞான சம்பந்த சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகங்கள் - முதல் திருமுறை வரப்பெற்று மிக மகிழ்ச்சியடைந்தேன். அதில் புதிதாகச்சேர்க்கப்பெற்றுள்ள தலக்குறிப்புக்களும், பொருள் தெரிவதற்கான அடிக்குறிப்புக்களும் படிப்பவர்களுக்குப் பெரிதும் பயன்படுவன. ஆதீனத்தின் சைவப் பண்புமிக்க தமிழ்த்தொண்டு மேன்மேலும் சிறப்புற இறைவன் அடியை நெஞ்சில் கொள்ளுகின்றேன்.

Sri M. S. H. Thompson, Avl.,
Twickenham. Middlesex England.

Kindly convey to His Holiness my grateful thanksfor his gracious gift of receivedby the first post this morning.

It is a most able publication, such as only His Holiness could have seen to the production of. Here without local knowledge and inadequate scholarship, we find it difficult to expound தேவாரம் to our pupils. With this publication in one's hands, one can do justice to the subject. I am bringing the book to the notice of Dr. L. D. Barnett of the British Museum as well as Dr. Jacob Laveen, Keeper of Oriental MSS. and Printed Books, British Museum LONDON, W. C. 1., where I am a regular reader.

Paper and printing are worthy of the great them; also the scholarship lavished on it.

அஷ்டா தசபுஜ ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு
ஏகதின லக்ஷார்ச்சனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீ தர்மபுரீஸ்வரஸ்வாமி கோயிலில் எழுந்தருளி அன்பர்கட்கு அருள்வழங்கி வருகின்ற அஷ்டா தசபுஜ ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு ஆடிமீ ஒவ்வொரு வெள்ளியிலும் விசேஷ வழிபாடு நடைபெற்றது. அதிலும் கடைவெள்ளி (14-8 53) வழிபாடு மிகமிக விசேஷம். அன்று தருமை மகாசந்நிதானம் அவர்களின் ஆணைப்படி, நாடு செழித்துவாழ ஏகதின லக்ஷார்ச்சனை காலை 7 மணி முதல் தொடங்கி நடைபெற்றது

திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஸ்ரீ தேவிக்கு மகாபிஷேகம் செய்வித்தார்கள். அபிஷேகம் பெரும் திட்டத்தில் நடைபெற்றது. மாலை ஆறு மணியளவில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தருமைக்கு எழுந்தருளினார்கள். தருமை மகாசந்நிதானம் அவர்களுடன் அளவளாவி மகிழ்ந்தார்கள். திருமஞ்சனாதிகளை முடித்துக் கொண்டு ஸ்ரீ தேவி ஆலயத்திற்கு எழுந்தருளியாகி, நல்லன எல்லாம் தரும் நாயகியை வழிபட்டார்கள்.

இரவு 11மணிக்கு அர்ச்சனை பூர்த்தியாயிற்று. சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமான மக்கள் கூட்டங்கூட்டமாக வந்து தரிசித்து தேவியருளுக்கு உரியவரானார்கள். அம்மை அழகுக்கு ஒருவரும் ஒவ்வாதசெல்வியாகக் காட்சியளித்தார்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப் பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம் மாதத்திலும் 14—8—53 அன்று திருப்பேணுபெருந்துறை ஸ்ரீ பிரணவேஸ்வரர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 9—9—1953.